★ நூருவதாண்டுச் சிறப்பிதழ் ★

சைவபரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம் : 1889 விரோதி ஹு ஆவணி மீ 26-ஆம் உ.

சிவமயம்

இலங்கையில் செய்தித் தாளாகப் பதிவுபெற்றது, பதிவு இல - 2

# இந்து சாதனம்

பிரதி விலை, ரூபா. 1-00

卐 Hindu Organ 卐

புத் 99, 100] யாழ்ப்பாணம்:- விபவ ஹு ஆவணி மீ (11 - 09 - 1988 இல - 8]

# நூற்றாண்டு காணும் இந்துசாதனம்

யாழ்ப்பாணம் நாவலர் பெருமானைத் தந்து இம்மண்ணிலே சைவமதம் தழைத்தோங்கச் செய்தது. இம் மண்ணிலேதான் சென்ற நூற்றாண்டிலே ஒரு சைவபரிபாலன சபையும் தோன்றியது. இன்று எம்முடைய சிறார்கள் சில தேவார திருவாசகங்களை நன்கு அறிந்து கொள்ள இச்சபை நடத்தும் சைவநெறிப் பரீட்சை பெரிதும் உதவுகிறது. இற்றைக்கு நூறு வருடங்களுக்கு முன்னே 1889 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் 26 ஆம் நாள் இச் சபை ஈழம்வாழ் இந்து மக்களுக்கென இந்து சாதனம் என்றொரு பத்திரிகையைத் தொடங்கியது.

ஈழத்து இந்து மக்களுக்கென ஒரு பத்திரிகையாக. இந்து சாதனம் தன்னளவிலே பல பணிகள் ஆற்றி வந்துள்ளது. ஏதோ வகையில், சிறிய அளவிலாவது சமய உணர்வினை எம் மக்களிடையே இது ஊட்டப் பணியாற்றியது. இதன் தற்போதைய ஆசிரியர் சட்டத்தரணி திரு. ஆர் என். சிவப்பிரகாசம் ஒரு கர்ம வீரர். நாற்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து இப்பத்திரிகைக்கு ஆசிரியராயிருந்து நடத்தி வருகின்றார். மணிவிழாக் கண்டகையோடு இந்துசாதனம் இப்பெரியாருடைய கையிலே வந்தது. அடுத்தமணியாண்டினை இப்பெரியாருடைய கையிலேயே இது கொண்டாட எம்பெருமான் அருள் பாலிப்பாராக.

மேன்மைகொள் சைவநீதி எல்லோருக்கும் உகந்த நீதி. அந்நீதியினை இந்து சாதனம் தொடர்ந்து பறைசாற்றிப் பணிபுரிய வேண்டுமெனப் பரமேஸ்வரனையும் அம்பிகையையும் வேண்டி, என்னுடைய நல்வாழ்த்துக்களையும் இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இவ் வருடம் ஆவணித் திங்கள் 26 ஆம் நாள் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்கும் இந்து சாதனம் தொடர்ந்து நடைபயில இறையருள் பாலிக்கும்.

பேராசிரியர் கலாநிதி அ சண்முகதாஸ்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
25. 8. 1988

## சாதனைச்சால்பிற் சிறந்திடும் இந்துசாதனம்

தூயசைவநெறி தொல்காப்பியர் பவணந்தி முனிவர் வரைவிட்ட இலக்கண அமைப்பின் வழி சொற்பிழை எழுத்து வழுவின்றியமைவது இந்துசாதன உரைநடை,

திருமுறை திருக்கோவையார், திருத்தொண்டர் புராணம், திருக்குறள் கம்பர் மலரவைத்த இராமாயணம், வில்லிபுத்தூரர் மகாபாரதம், புகழேந்தி நளவெண்பா, சிலப்பதிகாரம், சங்க நூல்கள் இவ்வகையில் இன்னுபல இந்து சாதன இலக்கியத்துக்காதாரம்,

மெய்கண்டசாத்திரம், திருவாதவூரடிகள் புராணம், திருச்செந்தூர் புராணம், சேக்கிழார் புராணம் இன்னன யாவும் இந்துசாதன சமய அறிவுக்களஞ்சியம் ஆகும்.

செந்தமிழ் நந்தமிழ்

## நல்லூர்த் தேர்விழாக் காட்சிசொல வானோர்க்குமரிதாம் !

நல்லூரில் வீற்றிருக்கு நாடவொணு னறுமுகவன்
பல்லோருங் கண்கண்டே பணிந்துமிக வின்பமுற
எல்லூருந் தேர்மிசையே யேறிவருங் காட்சிசொல
வல்லாரு மிங்குண்டோ! வானோர்க்கு மரிதேயாம்.

– மகாவித்துவான் சி. கணேசையர்

( நவாலியூர் தங்கத்தாத்தா க. சோமசுந்தரப்புலவர் இயற்றிய நல்லூர்க் கந்தசுவாமி அட்டகம் 24-8-1962 இந்துசாதனத்தில் வெளி வந்தது. )



நல்லைக்குருமணியும் - சிவதர்ம வள்ளலும் மரம் நாட்டுவைபவம். சபை நாவலர்ஆச்சிரமமண்டபம்

உ

## தமிழும் சைவமும் நிலைக்க- -அருந்துணை

இந்துசாதனம் - தமிழ், ஆங்கில பத்திரிகைகள் நூறு ஆண்டுகள் சேவை ஆற்றி, நிறைவு எய்தும் வேளையில் நாங்கள் மகிழ்ச்சி அடைகின்றோம்.

அறிவும் ஆற்றலும் வாய்ந்த பெரியோர்களை ஆசிரியர்களாகக் கொண்ட இப் பத்திரிகைகளின் சேவை தமிழும் சைவமும் நிலைக்க அருந்துணையாகவிருந்தது.

இப் பெரியோர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் அடிச்சுவட்டில், சிவயோகசுவாமிகளின் நல்லாசி பெற்றுப் பணிசெய்தமை சிறந்த வரப்பிரசாதமாகும்.

இம் மகத்தான பணி மேலும் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்க! வளர்க! என வாழ்த்துகிறோம்.

சிவதொண்டன் சபையார்.

## சென்னையிலிருந்து சுப சோபனச் செய்தி

இந்து: சாதனம் இந்தப் பெயர் எங்கள் இல்லத்தில் எப் பொழுதும் ஒலித்து வந்ததொன்று.

எமதருமைத் தந்தையார் திரு. இ. நம. சிவசம்பு அவர்கள் ஆங்கில இதழுக்கு 1915-ம் ஆண்டு தொடக்கம் 'R.N'—LANKA என்ற புனைபெயருடன் எழுதி வந்ததை இப்பொழுது ஞாபகப்படுத்துகின்றேன்.

வெள்ளிவிழா மலர் 949-ம் இல் அன்னாரின் கட்டுரை அவருடைய உருவப் படத்துடன் பிரசுரிக்கப் பட்டிருந்தது. இது எங்கள் குடும்பத்துக் குரிய பெருமை.

எமது சிற்றப்பன் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்கள் இதற்கு ஆசிரியராக நெடுங்காலம் கடமை புரிவது - இன்னொரு வகையில் எமக்கு மகிழ்ச்சி.

தமிழ் கூறும் நல்லுலகத்துப் பேர் அறிஞர் வரிசையிற் கணிக்கப்பட்டு வருபவரும் "1800 ஆண்டுகளுக்கு முன் தமிழர்" என்ற அரிய அறிவு நூல் யாத்தவரும் ஆகிய திரு. வி. கனகசபைப்பிள்ளை கலைமாணியின் புத்திரியின் புத்திரியின் புத்திரி யான் என்ற வகையில் தமிழ் இலக்கியத்துறையின் சைவ மரபில் இயங்கும் இந்து சாதனத்தின் சிந்தை மிளிர்வூட்டும் நூற்றாண்டுச் சாதனை எம்மை மகிழ்விக்கின்றது. நீள் நிலத்தில் நீங்காது இந்து சாதனம் நிலைகொள்ளத் திருவருள் பொலிவதாகுக.

திருமதி சிவ. கற்பகவல்லி
(முதுகலைமாணி)
01-09-1988 சென்னை

★ பத்திரிகையிற் சத்துணவு சித்தாந்த மெய்யுணர்வு ★

# சைவ பரிபாலன சபையின் பணி மென்மேலும் வளர்க

( கலாநிதி இ. பாலசுந்தரம்,
சிரேட்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகத் தமிழ்த்துறை )

சைவமுந் தமிழுந் தழைத்தோங்கவும், பன்னிரு திருமுறைகள் சைவ புராணங்கள், சைவ சமய சாத்திரங்கள் பற்றிச் சைவ மக்கள் அறிவுந் தெளிவும் பெறவும். பாடசாலை மாணவர்கள் சைவ நெறியில் ஆர்வமும் ஊக்கமும் கொள்ளவும் முன்னின்று வழிகாட்டும் வகையிற் பணி புரிந்து வரும் சைவ பரிபாலன சபை விபவ ஸு சித்திரை மீ 05 - 05 - 1988 இல் நூற்றாண்டு விழாவைப் பூர்த்தி செய்ததறிந்து பேருவகைகொள்கின்றேன். ஈழத்துவாழ் ஒவ்வொரு சைவ மகனும் பெருமைப்படவேண்டிய விடயம் இதுவாகும்.

தேசிய சமய நோக்கில் அரசு இந் நூற்றாண்டு நிகழ்வைக் கட்டாயம் போற்ற வேண்டும். சைவத் தமிழ் மக்கள் இந் நிகழ்வை நினைவுபடுத்த ஆவன செய்ய வேண்டும்.

கிழக்கிலங்கையிலே சைவத்தைப் பேணிப் பாதுகாத்துவரும் பெருமை இராமகிருஷ்ண சங்கத்திற் குரியதாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டிலே சைவத்தைப் பேணும் நடவடிக்கை குறிக்கோளுடன் தொடங்கப்பட்ட சைவ பரிபாலன சபையின் பணிகள் இன்று முழு இலங்கையையும் தழுவியதாகக் காணப் படுகின்றது.

பாடசாலைகளிலே சைவசமய எழுத்துப் பரீட்சை, சமய பேச்சுப் போட்டி என்பவற்றை நடாத்தி சைவ சமய அறிவூக்கத்துறையிலே மாணவர்களை இச்சபை நெறிப்படுத்தி வருகின்றமை பாராட்டத் தக்கதேயாகும்.

'இந்துசாதனம்' 'Hindu Organ' என்ற இரு பத்திரிகைகளையும் தொடர்ச்சியாக வெளியிட்டுச் சைவப் பணியைச் செவ்வனே நடாத்தி வருகின்ற இச் சபையினர், சிதம்பரத்தில் 'புண்ணியநாச்சியம்மையார்' அறக்கட்டளையைக் கொண்ட மடத்தினையும் பொறுப்பேற்றுச் சிறப்பாகப் பணி புரிந்து வருகின்றனர்.

சைவ அறிவும் சமய அனுட்டானங்களும் இளஞ் சந்ததியினரிடையே குறைந்து காணப்படும் இக்காலத்திலே - மரண பயமும் - விரக்தியும் மேலோங்கி மாணவர்களைக் கதிகலங்க வைக்கும் இன்றைய அரசியல் சூருவளியில் அவர்களுக்கு நல்வழி காட்டவேண்டிய பொறுப்பும் சைவ பரிபாலன சபைக்கு உரியதாகும். பொதுவான இடங்களில் கூட்டு வழிபாடு, சமயச் சார்பான சிரமதான இயக்கங்கள், பொதுப் பணிகளில் சைவ இளஞ் சமூகத்தை நெறிப்படுத்தும் பணியில் இச் சபை செயல் திட்டங்களை வகுத்துச் செயற்பட சிவன் சித்தமாகட்டு .

## வண்டமிழ் செய் தவ நிரம்ப வந்த .....

மனை மாட்சி மங்கலமானது. அதன் நன் கலன் மக்கட் பேறென்றன்றோ அத்தகைய பேறு எளிதில் ஆகுமா? சிவபாத விருதயரும் பகவதியாரும் திருத்தோணி புரம் வீற்றிருந்தார் சேவடிக்கீழ் வழிபட்டுக் கருத்துமுடித்திட' என்று புராணப் புராணப் புலவர் புகன்றவாறு, தோடுடைய செவியனைத் தொழுது வருங்கால் உலகுய்ய வொரு திருவாளன் உதிக்கும் காலமும் எழுந்தது.

எவ்வாறு உதிக்கவுள்ள உத்தமர் உலகுய்ய வைக்கவிருக்கின்றார் எனின் – ஒண் திருநீற்றின் ஒளி எண்டிசையும் தனி எழிலுடன் இலங்கவும் - தேவர்குலம் இஃதென்ன அதிசயம் என்று சிந்திக்கவும் - வேதியர் ஓமம் மேதினி விளங்கவும், நெடுந் தவஞ் செய்தவர் பெரும்பயன் உறவும். செந்தமிழ் அன்னையின் தவம் நிறைவேறவும் இந்தப் பிள்ளைப் பெரும் பேறு உற்றதென்று சேக்கிழார் சொற்றன படிப்பார் உள்ளத்தில் உட் பொருளை விளக்கும்.

'தென்னாடுடைய சிவனே போற்றி' என்றார் திருவாதவூர் அடிகள். இலங்கை தென்றிசை. திசை என்ற பெயர்பொறிக்க உதிக்கின்றார் ஓர் உத்தமர். இன்னும் மேலாகத் தண்டமிழ் வழக்கென்றென்று உண்டல்லவா. அச் செழும் வழக்கே எத் துறையிலும் மெச்சப்பட வந்துதித்தார் கவுணியக் குழந்தை. இவ் வுத்தம உதயத்தினால் அந்தத் திருத்தோணிபுரத்தீசன் அருள் இயல்பாகவே பெருகுமாம் – சிவம் பெருக்கும் பிள்ளையார் திருவவதாரம் செய்தமை எம்பவம் கருக்கும், நற்றவம் விரிக்கும்.

தோணிபுரம் ஒரே குதூகலம். அருட்பெறல் இவ்வவதாரம் என்றுணர்ந்தனர் அனைவரும். அந்தணர் இருக்கையெல்லாம் எழிலுயர் தோற்றத்திலே தூமணி விளக்குகள் சுடர்க் குழைகள் துலங்கின. மேலுலக விண் மீன்கள் இவற்றைக் காணின சாலவும் நாணி நின்றிருக்கும்.

### சைவச் சால்பு—வரவேற்பு

நிறைகுடம் நிறுத்தி நெய் விளக்கேற்றி நீர்மலர் தூவி இறையருள் உடையோரை வரவேற்பது சைவச் சால்பு. அங்ஙன் கவுணியக் குலக்குரிசிலுக்கு ஆசி கூறுவான். "புண்ணிய நறும் புனல் கொள்பொற்குட நிரைப்பார்" என்கின்றார் சேக்கிழார் சுவாமிகள்.

சகல அலங்காரங்களாலும் மிகை மிகையாக அமைந்தனஎனினும் நிறைவான நெறியான பூண்ய தெனில்.

ஆறுலவு செய்யசடை யையரருளாலே
பேறுலகி னுக்கென வரும்பெரி யவர்க்கு
வேறுபல காப்புமிகை யென்றவை விரும்பார்
நீறுதிரு நெற்றியி லிறுத்திநிறை வித்தார்.



## விழா மூன்று கண்ட வித்தகர் பண்டிதர் ம வே. திருஞானசம்பந்தர்

**4-12-19.1 இந்துசாதன இதழில் வந்த ஆசிரிய உரை.**

பிறையோராயிரங் கண்ட பெரியார் என்று சொல்லுவர் ஒரு நூற்றாண்டு உலக வாழ்வு கண்ட ஒருவரை. அப்பெரியார்கள் மிகச் சிலரே. அதுபோன்று கலாசாலை ஆசிரியராகவோ, பத்திரிகை ஆசிரியராகவோ வேறு துறைகளில் கருமம் ஆற்றுபவராகவோ ஒருவர் அவ்வத்துறையில் வெள்ளி விழா, பொன்விழா, வச்சிரவிழா வென்னும் இருபத்தைந்தாம், ஐம்பதாம், அறுபதாம் ஆண்டு விழாக்களிற் கலந்து கொள்ளும் பாக்கியம் பெற்றவரைக் காண்பது அரிதினும் அரிதென்றே கூறலாம். ஆனால் எங்கள் இந்துசாதனத்திற்கும் அதற்கு நாற்பானுண்டுகள் சில காலம் உதவி ஆசிரியராகவும் பலகாலம் ஆசிரியராகவும் செவ்வனேகடமையாற்றிச்சென்றவாரம் இந்துசாதனநேயர்களிடம்விடை பெற்றுக்கொண்டு ஒய்வெடுத்திருக்கும் பண்டிதர் ம. வே. திருஞான சம்பந்தர் அவர்களுக்கும் 'இவ்வரிதனிலும் அரிதாய பாக்கியம் இறையருளால் கிடைக்கப் பெற்றதென்பதெங்களுக்கு மாத்திரமன்று தமிழுலகிலே மொழியன்பர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் பேருவகை கொண்டதாகும். ஆகவே பண்டிதர் அவர்களை விழா மூன்று கண்ட வித்தகர் என்று புனைந்தழைத்தல் பொருத்தமானது.

வாழையடி வாழையாகத் தமிழ் வளர்த்த மரபிலுதித்தவர் பண்டிதர் அவர்களென்றால் இனிது விளங்கும். அன்னாரின் தமிழ் அன்பும் அறிவும் ஆற்றலும், ஈழமண்டல சதகம், திருவாதவூரடிகள் புராண உரை, அபிராமியந்தாதி உரை புலியூரந்தாதி உரை முதலிய நூல்களையும் ஆக்கிய மட்டுவில் க. வேற்பிள்ளை உபாத்தியாயர் என்னேற்றான் கொல் என்று உலகம் உவப்ப அவையத்துப் பண்டிதரை முந்தியிருப்பச் செய்தமை, தமிழை உயிராய் உடம்பின் செறி உதிரமாக் கொண்ட குடும்பத்திற்கே உரிய சிறப்பென்க. "தென்றமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து" என்று கற்றார் கருத்தில் அமர்ந்த இடைவயதில் ஈசன் அடிசார்ந்த பண்டிதர் மகாலிங்கசிவம் எங்கள் பண்டிதருடன் பிறந்தார் என்று சாற்றவும் வேண்டுங்கொல் செந்தமிழ் ஆற்றலாற் சைவம் வளர்த்து வரும் சித்தாந்த பூபதி புலோலி திரு சு. சிவபாதசுந்தரம் பிள்ளை எங்கள் பண்டிதரின் தாய் மாமனார் ஆகவே இருக்க வேண்டியது முறை.

எங்கள் பண்டிதர் பலகாலம் பத்திரிகாசிரியராகப் பலருக்கும் பண்புடன் கடமையாற்றிய பெருமை ஒரு புறம் இருக்க, அன்னார் எழுதிவந்த, இன்னமும் பன்னெடுங்காலம் நூலாசிரியராக எழுதப் போகின்ற, வசனநடை இருக்கின்றதே, அதன் புகழை நாம் எடுத்துரையாதிருப்பது முடியாது. வசனநடை கைவந்த வல்லாளர் என்று தமிழ் நிலவச் சைவம் தழைக்க அவதரித்த ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரை அழகாக அழைத்தனர் அறிஞர்கள். ஸ்ரீநாவலர்சிகாமணியவர்களின் நூல்களையும் உரைகளையும் நுண்பண்டிதர் அவர்களும் வசந்ததமிழ் தீஞ்சுவையுடைத்தென்பதை எஞ்ஞான்றும் எவரும் அறியும் வண்ணம் ஆற்றொழுக்குப் போன்ற ஓர் அரிய நடையில் சொல்லாக்கம் சொற்றொடராக்கம் செய்தனர் என்றால் மிகையாகாது. பண்டிதர் அவர்களின் வசனநடையைச் "சம்பந்த நடை', என்று எதிர்காலத்தில் அதற்கு ஒரு தனிமகிமை கொடுத்து வழங்குவார்கள் தமிழ் அறிஞ்ஞர்கள். என்பது சொல்லாமலே யமையும். இச்சம்பந்த நடை நகைச்சுவை நனிபொருந்தப் பெற்ற உவகை ஊட்டும் சல்லாப நடையாக இருந்து வந்ததென்பது அன்னவர் தொடர்ந்து எழுதிய "உலகம் பலவித" மென்னும் உலகியலமைந்த சிறுகதைகளால் நன்கு புலப்படும்.

இந்துசாதனப் பத்திரிகை ஆசிரியப்பதவியினின்றும் ஓய்வெடுத்துக்கொண்டாரே யன்றிப் பண்டிதர் அவர்கள் சைவமும் தமிழும் வளர்க்கும் இச் சைவபரிபாலன சபையின் ஆக்க வேலைகளினின்றும் விலகிக் கொள்ளவில்லை என்பது அவர்கள் தமிழ் நூற்பதிப்புக்களின் பொறுப்பைப் பிரத்தியேகமாக ஏற்றுக் கொண்டமையிலிருந்து பெறப்படும்.

பரமேசுவரன் திருவருளால் பண்டிதர் அவர்கள் இன்னமும் பன்னெடுங் காலம் பாரினில் வைகிப்பரம்பரன் அடியார்களுக்கும் ஏனையோருக்கும் பயன்படும் சைவ நூல்களை இயற்றியும் சைவ மாணவர்கள் சைவநெறி நின்றொழுக ஏதுவாகக் கூடிய செந்தமிழ் நூல்களை எழுதியும் தமிழுக்கும் சைவத்திற்கும் அணிகலனாக விளங்க எம்பெருமான் திருவருள் புரிவாராக.

# ஈழத்துத் தமிழ்சைவத்தனிச்செங்கோல்

தந்தை யொருவர் ஜீவந்தராயிருக்கையில் கூறும் தர்மக் கடமைகளை உடனுக்குடன் செயற்படுத்தத் தயங்கும் மக்கள் அவர் மறைவில் அவற்றைப் பற்றித் தீவிரமாகச் சிந்திப்பதும் துடிப்பாகச் செயற்படுவதும் உலகியல். இதே நிலை நமது யாழ் பாணச் சைவத்தமிழ் மக்கட் பொதுமையில் ஒரு கால் இடம் பெற்றிருத்தல் சுவாரஸ்யமானது. 1879 இல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மறைந்தார். சமகாலத்துச் சைவத்தின் நிலையையும் வெஸ்லியன் மிஷனரிகளால் அதற்கு விடுக்கப்படும் எதிரேறுகளின் தாக்கங்களையும் அவற்றுக் கிரையாகாதிருக்க சைவத்தின் நிகழற்பாலனவாகிய ஆக்கப்பணிகளையும் பற்றி அவர் கொடுத்திருந்த தர்மக்குரல்கள் பற்றி யாழ் - சைவத் தமிழ் மக்கள் தீவிரமாகச் சிந்தித்துத் துடிப்பாகச் செயற்படத் தொடங்கினர். அவர் மறைந்த ஆண்டுக்கு அடுத்த ஆண்டாகிய 1880 இல் இருந்து ஒரு 25, 30 வருடங்களே ஆக்கிய காலம் யாழ். சைவத் தமிழர்களுக்கான ஆக்கப் பணிகள் கன கச்சிதமாக நடைபெற்ற காலம் என்ற புகழுக்குரியதுண்டு.

சேர். பொன். இராமநாதன் திரு. ந. ச. பொன்னம்பலபிள்ளை, திரு. த. கைலாசபிள்ளை, நீதிபதி த. செல்லப்பா பிள்ளை நியாயவாதி எஸ். நாகலிங்கம் நியாயதுரந்தரர் வி. காசிப்பிள்ளை, சிவத்திருவாளர் சித. மு. பசுபதிச் செட்டியார், திரு. சிவகுருநாதபிள்ளை, மாண்புமிகு சபாபதி பிள்ளை என்ற பேரறிஞர், புகழாளர், பேரறிவாளர், பெருங் கொடையாளர் இவர்களையார் மற்றும் பலர் ஒருங்கிணைந்தனர். சைவபரிபாலன சபை, இந்துசாதனம் தமிழ் - ஆங்கில பத்திரிகை, யாழ். இந்துக்கல்லூரி என்ற யாழ்ப்பாண அதியுன்னதப் படைப்புகள் மூன்றும் ஒன்றையடுத்தொன்று உருவாயின.

## ஏகப்பிரசித்தி இந்துசாதனம்

1889 இல் இந்துசாதனம் தோன்றி இலங்கைத் தமிழ்ச் சைவ சமூகத்தின் தனிச் செங்கோலாயிலங்கியது. சைவம், தமிழ், தார்மீகம், சரித்திரம், அரசியல் துறைகளில் சைவத் தமிழர் நலன் பேணும் ஏகப்பிரதிநிதியாக இது நிலவிய கீர்த்தியை எண்ணில் பெருமிதமுறும் பாக்கியம் ஈழத்தமிழ்ச் சைவ சமூகம் அனைத்துக்கும் ஏகபோகமாகும். இலங்கை முழுவதற்கும் ஏகத்தலைவன் சேர் இராமநாதன் என்றிருந்த புகழ்மைக்கு எவ்வளவு மதிப்பளிக்கப்படுமோ அவ்வளவு மதிப்பு இதற்குஞ் சார்ந்தி ஆராமையுறுதலில் அர்த்தமுண்டு.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இலங்கைச் சைவத் தமிழ் ஆக்க முயற்சிகளுக்குக் குரல் கொடுத்துவரும் தொண்டு இந்துசாதனமொன்றுக்கே வாய்த்திருந்தல் கண்கூடு.

இராமநாதன் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி அவற்றையடுத்து யாழ் - நிலத்திலே தோன்றிய அனைத்துக் கல்லூரிகளினதும் தோற்ற வளர்ச்சிகளுக்குப் பிரசார பத்திரிகையாகவும் அம்முயற்சிகளுக்கு வாழ்த்து வரவேற்பிதழாகவும் இது வழங்கியிருத்தல் பிரத்தம். பசுபதிச் செட்டியாரின் திருக்கேதீச்சரப் புனருத்தாரண ஆரம்பப் பணியிலிருந்து காலாகாலமெல்லாம் அது பெற்றுவந்த விருத்தி நிலைகளனைத்தையும் உலகுக்கறிவித்து வந்த தெய்வீகப் புண்ணியப்பேறும் இதற்குண்டு. நாவலருக்குப் பின் யாழ்ப்பாணத்துத் தமிழ் - ஆங்கில மொழி நடைகளின் ஏற்றமும் எடுப்பும் இருந்தவாற்றை அறியவைப்பது இப்பத்திரிகையே.

இந் நூற்றாண்டின் முற்பகுதியில் அதாவது 1940 வரை வெளியான இப்பத்திரிகையின் உருவுந், திருவும், அளவுப் பருமனும், பொருட் பொலிவும் இன்றைக்கும் அரசாங்க நூதனசாலைச் சுவடிக்காப்பகத்தின் (Arehiues) காண்பார் கண்களைக் களிப்பிக்கின்றன. இன்று ஒரு விதத்திலும் ஒருவர் மூலமாகவும் அறிய முடியாதிருக்கும் "என்னென்னப் ந. தத்துவம்" பற்றி இந்துசாதனத்தில் முன்பு ஒருகால் வந்ததாகச் சொல்கிறார்கள். இவ்வகையிலே தேடக்கிடையாத அரும் பொருட்களஞ்சியமாகவும் எண்ணிப் பாராட்டப்பட உள்ளது இப்பத்திரிகை. இன்றைக்கும் யதார்த்தமான இலட்சியப்பிடிப்புள்ள சைவத் தமிழ்ப் பிரதி இதுவேதான்.

இதன் நூற்றாண்டு நிறைவெய்தும் மங்கல வேளையில் இதன் தொன்மை மேன்மைகளை நினைத்து இன்னும் அவை மீளப்பிரார்த்தித்து ஆசீர்வதிப்போமாக.

சித்தாந்தவித்தக பண்டிதர்
மு. கந்தையா, ஏழாலை

## தொடரட்டும் பணி

"இந்துசாதனம்" இதழ் தனது நூற்றாண்டைக் கொண்டாடுவது கண்டும், கேட்டும் ஒவ்வொரு இந்துவும் இறும்பூதெய்துவர்.

ஒரு பத்திரிகை நூற்றாண்டு காண்பது என்பது பெரும் சாதனையாகும். அதுவும் ஒரு சமயப் பத்திரிகை பத்துத் தசாப்த அகவையை எட்டுவது மிகப்பெரும் சாதனை என்பது வெறும் புகழ் மொழி அல்ல.

பல்வேறு கட்டங்களிலும் ஏற்பட்ட சோதனைகளையும், உண்டான சவால்களையும் எதிர்த்து நின்று சமாளித்து யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் "இந்துசாதனத்தை" இங்கு வாழும் ஒவ்வொருவரும் வாழ்த்த வேண்டும். அது வளர மேலும் ஆதரவுநல்க வேண்டும்.

இந்து சமய தத்துவங்களையும், சைவ சித்தாந்தக் கருத்துக்களையும் மக்களிடையே பரப்புவதற்கு "இந்துசாதனம்" செய்துவரும் தொண்டைப் பாராட்ட வார்த்தைகள்போதா அந்தந்தக் காலத்துக்கு ஏற்றவாறு அது சமய வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் அளப்பரியன.

நாகரீக ஓட்டத்தில் சமய வாழ்வை மறந்துவிடும் தன்மையை நீக்குவதற்கு, இந்துசாதனத்தின் சேவை இன்னும் பல்லாண்டு தேவை.

இந்த மண்ணின் மூத்த, முதுபெரும் பத்திரிகையாளராக விளங்கும் திரு. ஆர், என். சிவப்பிரகாசம் அவர்களின் வழி நடத்தலில் சைவ மக்களுக்கு வேண்டிய யோசனைகளையும், போதனைகளையும் இந்துசாதனம் தொடர்ந்துநல்கட்டும்.

சைவம் வாழ அதன் பணி தொடரட்டும்.

கோபுரம் போல் உயர்ந்துநிற்கும் "இந்துசாதனம்" வாழவும், மேலும் வளரவும் சமயப் பிரசாரத்தை தொடர்ந்து ஆற்றவும் எல்லாம் வல்ல இறைவன் அருள் கிடைக்க இறைஞ்சுகிறோம்.

ம. வ. கானமயில்நாதன்
ஆசிரியர்,
உதயன், சஞ்சீவி
08- 09- 1988



முன்னுள் அவைத் தலைவர்-
திரு. ச. செல்வராசா



உதவிச் செயலாளர்
சட்டத்தரணி-
இராஜ. இராஜேஸ்வரன்
தங்கராசா.

## அந்த விஞ்ஞானப் பட்டதாரி யார்

ஆங்கில இந்துசாதனத்தின் புகழுக்கு அடிகோலிய அறிஞர்களிலே இந்த விஞ்ஞானப்பட்டதாரி சிரேட்டர் எனலாம்.

திருமந்திரம் சைவசித்தாந்த அடிப்படைத் தத்துவங்கள் வேதாந்த மூலசாரம் ஆகிய நூல்கள் இந்துசாதன ஆங்கில இதழிலே முதலிலே கட்டுரைகளாக வெளிவந்தன.

நுணுக்கமாகச் சைவ சித்தாந்த செம்பொருள் ஆய்ந்து ஆங்கிலத்தில் அரிய குறிப்புரைகள் புகுத்தித் தத்துவ விளக்கம் செய்த இப் பெரியார் நீராவியடிப் பழங்குடிச் சீலர் அ. விசுவநாதன் அவர்கள் அரசநிருவாகவுயர் சேவையிலிருந்து ஓய்வு பெற்றபின இந்து சாதனம் ஆங்கில வெளியீட்டுக்குத் தொடர்ச்சியாக விடயதானஞ் செய்த வித்தகர்.

சைவ சமயத் தத்துவங்களை உரியமுறையிலே உண்மையாகக் விளங்கிக் கொள்ள இப் பெரியாரின் நூல்கள் பெரிதும் துணையாகும்.

பெயர் பெற விரும்பாத உயர் குண அறிஞர் இவர்.

ஆங்கில இதழின் சார்பாக ஈண்டு நினைவுறுவதில் எங்கள் நன்றியையும் வெளிப்படுத்துகின்றேம்.

## கலாயோகி ஆநந்தக்குமாரசுவாமி -நினைவு

ஈழத்தமிழ் இனத்தின் மதிநுட்ப கலைத்திட்ட நிபுண சிகாமணிகளில் ஒருவர் கலாநிதி ஆநந்தக்குமாரசுவாமி அவர்கள்.

புகழுக்கும் புலமைப் பொலிவுக்கும் பெயர் பெற்ற பெரும் குடும்பம் வீரர் முத்துக்குமாரசுவாமி, பொன்னம்பல முதலியார் வீரர் இராமநாதன், வீரர் அருணாசலம் ஆகியோருக்குரியது அத்தகு உத்தமப் பரம்பரைவித்து கலாயோகி ஆநந்தக்குமாரசுவாமி அவர்கள்.

இந்தியக்கலை சித்திரம் பற்றி ஆராய்ச்சி நூல்களியற்றிய இவ் விபுதர் அமெரிக்கா தேசத்திலே பொஸ்டன் நகரிலுள்ள நுண்கலைக் கூடத்தில் பணிப்பாளராகவிருந்து நன்மதிப்பு நானிலத்திற் பெற்றவர்.

இந்துசாதனப் பத்திரிகாசிரியர் 1959 ஆம் ஆண்டு அமெரிக்கக் கல்விச் சங்கச் சன்மானம் பெற்று அந் நாட்டிலே பல்கலைக்கழகங்கள், நீதிமன்றங்கள், பத்திரிகாலயங்கள் முதலியனவற்றை அழைப்பின் பேரிற் பார்வையிட்ட பொழுது பொஸ்டனில் கலாயோகியின் பெருமையை அக்கலைக்கூட அமைப்பிலிருந்து அறியும் வாய்ப்புப் பெற்றனர்.

(வளரும்)

## எங்கள் எழுச்சிக்கு எழிலூட்டிய -அறிஞர்கள்

விழாமலர்கள் விசேடவெளியீடு மேலும் வழமையான இதழ்களிலே அமைந்துள்ள அரிய விடய உபய அன்பர்களை எண்ணிய வண்ணம் இந்த விசேட இதழை அமைக்கின்றேம். நவாலியூர் - தங்கத் தாத்தா சோமசுந்தரப்புலவர் அவர்கள் தெவிட்டாத் தேன் கவிகளால் இந்துசாதன நங்கையை அர்ச்சித்தமை விசேட நிகழ்ச்சியாகும்.

புலவருடன் பிறந்த பெரியார் இ. வேலுப்பிள்ளை அவர்கள் அச்சக அதிபராகப் பேருதவி புரிந்ததை மறக்கமுடியாது. புலவர் இயற்றிய பாக்கள் அச்சேற்றப்படாமலிருந்தவைகளை அவர் இந்துசாதனத்தை அலங்கரிக்கத் தந்துதவினர்.

### சைவ மக்களின் தனிக்குரல்

சைவப் பெரியார் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்களைப் பிரதம ஆசிரியராகக் கொண்டு ஈழம் வாழ் சைவ மக்களின் ஒரே குரலாக விளங்கிவரும் "இந்துசாதனம்" பத்திரிகையின் நூற்றாண்டு எழுவதை யொட்டி எமது மகிழ்ச்சியையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதுடன் இப்பத்திரிகையின் சேவை எமது பெரியார் மூலமாகச் சைவத் தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து கிடைக்கவேண்டுமென அம்பாளைப் பிரார்த்திப்போம்.

தெல்லிப்பழை
இந்து இளைஞர் சங்கம்

## தமிழ்— ஆங்கிலத்திலே தகமை மிக்க இன்னொரு அறிஞர்

எங்கள் சபையின் ஆரம்ப காலத்தில் அதைப்பேணி வளர்த்த பெரியார்களில் ஒருவர் கொக்குவில் வாசி அ. பாரத்தின முதலியார் அவர்கள்.

இவர்கள் சைவசித்தாந்த விளக்கமாகப் பலநூல்கள் ஆங்கிலத்தில் இயற்றி பெயர் பெற்றவர்.

இந்து சாதனத்துக்கு அரிய இலக்கிய சமயக் கட்டுரைகள் எழுதி வாசகர்களை மகிழ்வித்த திருமதி ச. அமிர்தாம்பிகை கலைமாணி சபாரத்தின முதலியாரின் அருந்தவப்பேறு.

இப் பத்திரிகைகள் நூறாண்டுப் படியில் ஏறிக்கொண்டிருக்கும் இன்று முதலியார் அவர்களையும் அன்னாரின் முதன்மையான பணிகளையும் நினைவுகூருதல் கட்டாய கடமையாகும்,

## சைவசமய பாடப் பரீட்சை 1988

★●★

விண்ணப்பிக்கும் இறுதிநாள்:- — 15. 09. 88

பரீட்சை நடைபெறும் நாள் :- — 06. !. 88

## சித்தாந்த பண்டித பரீட்சை

விண்ணப்பிக்கும் காலம் ;- 15. 09. 88 — 15. 10. 88 -வரை

பரீட்சை :- 29. 12. 88 — 31. 12. 88 -வரை.

## பண்ணிசைப் போட்டி

1989. மாசி

## இன்னுமொரு சாதனை இந்துசாதனத்தில்

இந்துசாதனப் பத்திரிகாசிரியராகயாம் பணிபுரியத் தொடங்கிய 01 - 12 - 1951 திகதி அப்பத்திரிகைக்கான அச்சகப் பகுதியில் அலுவலாளர்களாக இருந்தவர்களில் ஒரே ஒருவர் இன்றும் தொடர்ந்து கடமையாற்றுகின்றார். திரு. கா. இரகுநாதன். 1947 ஆம் ஆண்டிலேயே அச்சகத்திற் சேர்ந்தவகையில் 41 ஆண்டுகள் பணிபுரியும் சாதனையாளராகின்றார். இவர் சிறந்த சைவ சமயி. திருமுறை ஓதுவதிலும், ஏனையோரையும் அத்திருத் தொண்டில் அமைப்பதிலும் அபிமானியாக விளங்குகின்றார்.

# தூண்டாத் திருவிளக்குச் சோதி

சைவ பரிபாலன சபை தந்த

# இந்துசாதனம்


சைவ பரிபாலன சபை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


இந்துசாதனம்

விபவ ஞு ஆவணி மீ
(11 - 09 - 1988)


## என்ன புண்ணியம் செய்தனே !

★ ★

முடிவிலாத முதல்வனின் நெறியை எடுத்தியம்பும் இதழும், முடிவிலாது நெடும் பயணம் செய்யவே வேண்டும்; இப் பெரும் பணியில் 'இந்துசாதனம்' விரோதி ஆண்டு ஆவணித் திங்கள் இருபத்தெட்டாம் நாள் இறையருள் பாலிக்க அர்ப்பணஞ் செய்து தொண்ணூற்றொன்பது ஆண்டுகள் தாண்டி இன்று நூறுவதாண்டில் அடி எடுத்து வைப்பதில் இயற்கையாக இறும்பூதடைகின்றோம்.

திருவருள் கைகூடினன்றி ஒரு பணியும் உருவாகாது. எனவே இந்த ஆநந்த சந்தர்ப்பத்தில் 'என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே' என்று சொல்லி இறைவன் இன் கருணையை எண்ணிய வண்ணம் நாமும் நிற்கின்றோம், சைவ மக்களும் அவ்வாறு சொல்லி அகமகிழ்வெய்துகின்றனர்.

வித்துவ சிரோமணியை. ஆசிரியர் த. கைலாயபிள்ளையை வாழ்த்தி வணங்கி எமது குரு பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தபிள்ளையை உள்ளக் கமலத்தில் உருவமமைத்து கைகூப்பி மெய்மறந்து நிற்கின்றோம்.

முப்பத்திரண்டாண்டுகள் இப் பத்திரிகையின் எழிலையும் வளத்தையும் எழுப்பிய பண்டிதர் அக்காலத்துக்கு முன் எட்டாண்டுகள் ஆசிரியர் பொ. கார்த்திகே அவர்களுக்குத் துணை புரிந்து வந்த பணியையும் சேர்த்து நோக்கும் பொழுது ஒப்பற்ற சாதனை ஒன்றை அன்னார் நிலைநாட்டினர் என்பது இந்து சாதனத்தின் வரலாற்றில் ஒரு பெரும் இடத்தை அவர்கள் பிடித்துக்கொண்டதைப் புலனாக்குகின்றது.

'உலகம் பலவிதம் என்று ஒவ்வோரிதழிலும் கலை நய மிக்க நகைச்சுவை பொழிக்கும் பலப்பல சரிதைகள் தொக்க கலகலப்பானவற்றைத் தந்த சம்பந்தம் பண்டிதரையே இந் சாதனம் என்றவுடன் யாப்பரு எண்ணுவர். 'உலகம் பலவிதம்' உரை நடைக்கலம்பகம் என்றே புலவர்களாற் புகழப்படுவது.

இந்துக்கல்லூரியில் எமக்கு அருந்தமிழ் ஆசிரியராய் இருந்து எம்மை அவ்வளத்திலே செவ்வியாக்கிய எமது குரு தமது சீரிய கரங்களினல் இப் பத்திரிகையின் ஆசிரியப் பொறுப்பை உவந்தளித்து ஆசிகூறியும் வந்த பாக்கியம் பெற்றோர்.

எமதுள்ளப்பாங்கு அவ்வாரம் வெளிவந்த இந்து சாதனத்திலே மூவிழாக் கண்ட பத்திரிகை வித்தகர் என்ற அங்கத்திலே தொனித்ததென்று பண்டித குரவர் எம்மை பாராட்டியதை ஈண்டு நினைவுக்கழைக்கின்றோம்.

அவ்வாறே இடைக் காலத்திலே எமது பெருநட்புக்குச் சைவசித்தாந்த ஞானத்தாலும் சீலத்தாலும் உரியவராகும் ஆசிரியர் மு. மயில்வாகனம் அவர்களின் நற்பணியும் ஆங்கே எடுத்துக்காட்டப் படவேண்டியது.

இது ஒருவகை உவகை. இன்னொரு நன்னயமும் உண்டு பேராசிரியர் கலாநிதி க. கணபதிப்பிள்ளை அவர்கள் தமிழகமொழி வித்தகர் நா. பார்த்தசாரதி அவர்கள் இந்துசாதனத்தின் எழிலுக்கு எழிலூட்டியவர்களிற் சிரேஸ்டர். இவ்வகையிலே பல பேரறிஞர்கள் இப்பத்திரிகைக்கு புகழ் கொணர்ந்திருக்கின்றனர்.

ஓங்கிய புகழ் ஒன்றுமே நின்று நிலவுவது என்றனர் வள்ளுவனார்.

ஒன்ற உலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றுது நிற்பதொன் றில்

பொன்றுப்புகழிது அலைய நன்றாக நமக்கு உறுதுணையாயிருந்த, இவருக்கிறு யாவருக்கும் மூன்று நன்றி கூறியவண்ணம் இறைவனை இறைஞ்சி அமைகின்றோம்.

நீர்வளத்தை நெடிது நிரைத்து விட்டனம்; இனி நிலவளத்தை எடுத்தியம்புவம்.

நாவலர் மேவிய நல்லறம் என்னும் நிலநலப் பேறும் சைவபரிபாலன சபை அங்கு வித்திடப் பெற்ற இந்துசாதனம் என்னும் தாவரத்தின் மூலவேர் வித்துவசிரோமணி ந. சி. பொன்னம்பலப் பிள்ளை. நாலாபக்கமும் பரந்தோடும் கிளை வேர்கள் வீரர் பொன. இராமநாதன், வை. துரைசுவாமி, அ. கனகசபை, சைவப் பெரியார் சிவபாத சுந்தரம்பிள்ளை என்ற பேர் அறிஞர்களும் அவர்களுக்குப் பின் தலைமை தாங்கிய பெருந்தகையினரும், உறுப்பினர்களும் எனலாம்.

இன்றுவரை - தொண்ணூற்றொன்பதாண்டுகளிலே சைவப்பிரகாச அச்சக அதிபர்களாக அரும் பணியாற்றியவர்கள் பலனிருவர் கடமையே கண்ணானவர்கள். அந்த மகத்தான மரபைப் பேணித் தொண்டாற்றும் துணிவும், சுறுசுறுப்புமுள்ள திரு. இ. செ. மன்மதராயன் அவர்கள் சபையின் நெடுங்கால நிருவாக உறுப்பினர். பொருளாளராகவும் பணியாற்றியவர். யாழ் மாநகர சபை முதல்வருள் துணை நகர பிதாவாகவும், அங்கத்தவராகவும் பெயர் படைத்தவர். எனவே இந்த அதிபரல் அகிபலம் பத்திரிகை பெற வழியுண்டெனலாம்.

சபைச் செயலாளர் ஒரு தொழில் அதிபர் பலவளம் படைத்தவர் செய்திறன் மிக்கவர், திரு. த. சண்முகலிங்கம் அவர்கள்.

பொருளாளராக இருந்து வருபவர் வைத்திய கலாநிதி பே. யோகநாதன் அவர்கள், சபையின் பாரம் பரிய தொடர்புடையவர்கள். சுற்றத்தவர் நுணுக்கமும் நுட்பமும் கொண்டவர். திரு. சிவ இராஜேந்திரம் அவர்கள்.

தலைவர் ஒரு சட்டத்தரணி மட்டுமல்ல, பழைய தலமாகிய வேலக்கை பிள்ளையார் கோயில் அறங்காவலர். மானிப்பாய் நகர பிதாவாகக் கீர்த்தியுற்றவர்.

துணைத்தலைவர் திரு. சு. செல்வராசா அவர்கள் முன்னாள் இச்சபைத் தலைவர். சைவ சங்கங்களின் பேராதரவாளர் சட்டத்தரணியாகப் பெயர் படைத்தவர்.

முன்னர் இத்தகையபதவி வகித்தவர்கள் சட்டத்தரணி தி. கா. சண்முகம் அவர்கள், சட்டத்தரணி அ. அருளம்பலம் அவர்கள், சட்டத்தரணி ஆ. தனபாலசிங்கம் அவர்கள், ஆசிரியர் மு. மயில்வாகனம் அவர்கள், முதுகலைமாணி இரகுநாத முதலியார், முகாந்திரம் இ. பொ. இராசையா அவர்கள்.

## சிவ. இராசேந்திரன் J. P.

சபைத்தலைவர், சைவ பரிபாலனசபை.



சிவ. இராசேந்திரன் அவர்கள்

சைவ பரிபாலன சபையைப் போன்ற ஒரு கட்டுக் காப்பை நாவலர் பெருமான் கனவு கண்டார். அவரின் சீவிய காலத்தில் உருவெடுக்காவிடினும், அவர் இறந்து பத்தாண்டுகளுக்குப் பின், 1888-ம் ஆண்டு அவரின் அபிமானிகளாலும் உறவினர்களாலும், மாணவர்களாலும் இச்சபை தோன்றியது. முதலாவது தலைவராக அவரின் மருமகனாகிய வித்துவ சிரோமணி திரு. ந. ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். காரியதரிசியாக அவருடைய பெருமகன் திரு. த. கைலாயபிள்ளை இடம் பெற்றார். அந்நாளில் இருந்த சைவப் பெரியார்கள் திருவனந்தபுரம் உயர் நீதிபதியாய் இருந்து இளைப்பாறிய திரு. தா. செல்லப்பாபிள்ளை திரு. வ. காசிப்பிள்ளை, திரு. மு. பசுபதிச்செட்டியார், அப்புக்காத்து திரு. சி. நாகலிங்கம், இன்னும் ஆர்வமுள்ள பலர் சபையையும் நாளொரு வண்ணம் வளர்ந்து 1932-ம் ஆண்டு இலங்கை அரசினரால் சட்ட பூர்வமான சபையாக அங்கீகரிக்கப்பட்டது (Incorporated Body) இத்தகைய சபை சமய வளர்ச்சியையும், தமிழையும் திருமுறைகளையும் நோக்காகக் கொண்டு, 1889-ம் ஆண்டு புரட்டாதி மாதத்தில் இந்து சாதனம் Hindu Organ என்ற பத்திரிகைகளைப் பிரசுரிக்க ஆரம்பித்தது. இது சைவ உலகத்துக்குப் போற்றதகுந்த தொண்டு. எனவே இப் பத்திரிகைகளும் நூறுண்டு இடைவிடாது சேவை செய்த பெரும் புகழையும் நன்மதிப்பையும் பெற்று விட்டன. சைவப்பிரகாச அச்சகம் இப் பத்திரிகைகளைப் பிரசுரித்தது அதன் அபிவிருத்திக்கு சபையின் நிர்வாக அங்கத்தவர்கள்

(வளர்ச்சி 5 ஆம் பக்கம்)

## புதுப் பொலிவு பெறுக!

ஈழத்தின் தமிழ்ச் செய்திப் பத்திரிகை முன்னோடிகளுள் ஒன்று இந்து சாதனம். 1889 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 2ம் திகதி தோற்றம் பெற்ற இப்பத்திரிகை ஸ்ரீலஸ்ரீ நாவலர்பெருமானின் நோக்கங்களின் வழி நடந்து சைவத் தமிழர் சால்புக்குப் பதிவேடாகத் திகழ்ந்து வரும் பெருமையுடையது.

இப்பத்திரிகையிலே பண்டிதர் ம. வே. திருஞான சம்பந்தபிள்ளை ஆசிரியராகப் பணிபுரிந்த காலம் (1921-1951). சமகால நவீன இலக்கியத்துறையிலும் அது கவனம் செலுத்தியது. திருஞானசம்பந்த பிள்ளையவர்கள் எழுதிய உலகம் பலவிதக் கதைகள் என்ற தலைப்பிலான ஆக்கங்கள் ஈழத்துத் தமிழ்ப் புனைகதை வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு வளர்ச்சிக் கட்டத்தைப் பிரதிபலித்தவை என்பதை இங்கு நினைவூ கூர்வது அவசியமாகின்றது.

நூறுவது வயது நிறையும் இந்துசாதனம் சமகால சமூக - பண்பாட்டுத் தேவைகளை நிறைவு செய்வதற்கான புதிய பொலிவுடன் வெளிவரவேண்டும் என்பது எமது வேணவா.

வாழ்க! வளர்க! நா. சுப்பிரமணியன்.

## கைலாசநாத பிள்ளையார் கோவில் மகாகும்பாபிஷேகம்

○●○

நல்லூர்த் தெய்வ ஒளிப் பரப்பில் உள்ள ஆலயங்களில் ஒன்றும் மிகப்பழையதும் பெருவரலாறு படைத்ததுமாகிய இத் தலத்திலே விபவ ஆவணி 30 (15.9.88) வியாழக்கிழமைமகா கும்பாபிஷேகமகத்தான வைபவம் நிகழவுள்ளது.
பேராசிரியர் சிவஸ்ரீ கா. கைலாசநாதக்குருக்கள் நியாயசிரோமணி சி. சுப்பிரமணிய சாத்திரிகள் முதலாக முப்பதின்மர் சிவாசாரியசிலர்கள் இந்த அரிய கிரியையிற் பங்கு கொள்வது சிறப்பம்சமாகும்.

## வரிசையில் இரண்டாவது ஆசிரியர்

பெரியார் த. கைலாயபிள்ளை அவர்கள் நாவலர் தர்மப் பொறுப்புக் காரணமாக ஒய்வு பெறத் திரு. பொ. கார்த்திகேசு அவர்கள் இந்துசாதன ஆசிரியர் ஆகி முப்பதாண்டுகள் அப் பணியில் விளங்கினர். அவர்களுக்கு உதவியாக அமைந்த பண்டிதர் ம வே. திருஞானசம்பந்தன் பின் ஆசிரியர் ஆனார்.

# இந்துசாதனத்தின் தொண்டு தொடரட்டும்

## பணி நின்று நிலைக்கட்டும்

### சிவநெறிச் செல்வர் சிவசண்முகவடிவேல்

ஆதி காலத்திலிருந்து இன்று வரையுள்ள காலத்தைக் கணக்கிட்டுப் பின் நூறு ஆண்டுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது நூறு ஆண்டுகள் மிக மிகச் சொற்பமான தாகத் தான் இருக்கும்.

அதே ஒப்பீடு போல இயங்கி வரும் பத்திரிகைகளோடு நூறு ஆண்டாக இயங்கி வரும் பத்திரிகையை இணைத்துப் பார்க்கும் போது அதனுடைய நிலைப்பாடு அரும் பெரும் சாதனை என்று தான் சொல்ல வேண்டும்.

அதிலும் சமயப் பத்திரிகை நூறு ஆண்டு இயங்கி வருகிற தென்றால், அதிலும் தமிழில் நடந்து கொண்டிருக்கிற தென்றால், அது மனித ஆற்றலால் மாத்திரம் அல்ல - அந்த ஆற்றலுக்குத் திருவருட்டுணையும் ஊட்டச்சத்தாக உறுதுணையாக உற்றிருந்து இயங்கிக் கொண்டிருப்பதைத் தெற்றென உய்த்துணரலாம்.

ஆலயங்களில் நடைபெறும் அநுச்சனை வழிபாடுகள் முட்டின்றி முறையாக நிகழுகின்றன என்றால், சைவசமயம் பொலிவு பெறுகிறது. தமிழ் வளர்கிறது. ஒழுக்கம் உயர்கிறது. பண்பு பரிமளிக்கின்றது. அன்பு அருளாட்சி புரிகின்றது. மேன்மைகொள் சைவநீதி மிளிர்கின்றது. தெய்வ நீதி தழைத்து ஓங்குகின்றது என்றெல்லாங் கருத இடமுண்டு.

அதே போலச் சிவத்தமிழ் ஏடான. இந்துசாதனம் நூற்றாண்டுக் காலமாக நின்று நிலவி வருகிறதென்றால், முன்னர் கூறிய கோவிற்பணி அத்தனையும் தளப்பமின்றி நிகழ உறுதுணையாகப் பக்கபலமாக அரிய ஆலோசகராக - வழிகாட்டித் தந்தையாக, பெற்ற தந்தையாகப் பேணும் தாயாகத் தக்க தாரமாக உற்ற குருவாக உயிர்த் தோழனுமாகச் சிவ சம்பந்தமுடைய தக்கார்கள் கைகளில் மாதம் தோறும் தவழ்ந்து வருகிறது என்றால் மிகையாகாது.

அந்த அரும் பெரும்பணியைச் சாற்றுண்மைத் தலைமைப் பணியைத் தலைமுறை தலைமுறையாகத் தனது தலையாய சேவையாக இந்து சாதனம் ஆற்றி வருவது ஆநம் அறிந்த தொன்றே.

இந்து சாதனத்தின் தொண்டு தொடர்ந்தும் மேன்மேலும், ஆல்போலத் தழைத்து அறுகு போல் வேரூன்றி முகில் போல் நிழல் செய்து சிவசம்பந்த உள்ளங்களை வளமாக வளர்த்தெடுக்கும் அரும் பணியில் என்றும் நின்று நன்றே நிலைக்க நல்லாசிகளை வழங்குகின்றேம்.

அதே போல, பத்திரிகை ஆசிரியருக்கும் அரும்பணி புரியும் அனைவருக்கும், அம்மை அப்பர் அருமைத் திருவடிகளை அகத்தில் ஆராதித்து ஆசி வார்த்தை வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேம்.

வாழ்க. வளர்க. நிலைக்க. சிறக்க!!!

உ

## பல்லூழி வாழ்க இனிது !

இலக்கண வித்தகர்
— பண்டிதர் இ. நமசிவாயம், மயிலிட்டி —

(கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

நல்லைதரு நாவலர் சைவமொடு செந்தமிழ்
நானிலத் தோங்கல்வேண்டி
நன்றிதரு பலதொண்டு செய்தனர் விண்செல்ல
நலிவுறு தத்தொண்டுகள்
எல்லையில் லாமலெக் காலத்து நிலைபெறற்
கென்றுநல் லவர்கள்கூடி
ஏற்றமார் சைவபரி பாலனப் பேர்ச்சபை
ஈரைம்ப தாண்டின்முன்னர்த்
தில்லையோன் அருள்கொண்டு நிறுவினர் அச்சபை
செய்தொண்டி னோரங்கமாய்த்
திகழ்கின்ற 'இந்துசாதன' மெனும் திவ்விய
சிவமணம் கமழும்ஏடு
பல்வகையில் நந்தமிழ் சைவம்பு ரந்துநூ
றுண்டுசெய் பணியினுய
பயனுகர்ந் தனமஃது பரசிவன் அருளினுற்
பல்லூழி வாழ்கஇனிதே





செயலாளர்-
திரு. த. சண்முகலிங்கம்.

பொருளாளர்
வைத்திய கலாநிதி-
திரு. வே. யோகநாதன்.

பரீட்சைச் செயலாளர்
சைவப்புலவர்-
திரு. வ. கந்தசாமி.

## தூண்டாத் திருவிளக்கு..

4 ஆம் பக்கத்து வளர்ச்சி

அன்று முதல் இன்றுவரை சலியாமல் உழைத்தவர்கள், முக்கியமாக சித்தாந்த சிரோமணி மு. மயில்வாகனம் முகாந்திரம் E.P. இராசையா, அமரர் E. சபாலிங்கம் திரு. R.C. மன்மதராஜன் போன்றவர்கள் அச்சகத்துடன் நெருங்கிப் பழகியவர்கள் தற்போது சபை திரு. R. C. மன்மதராஜன் J.P அவர்களை அச்சகத்துக்கு கௌரவ முகாமையாளராகத் தெரிவு செய்திருக்கின்றது, அச்சகத்தின் வளர்ச்சிக்கு அவர் இடையறாது முயற்சித்துக் கொண்டிருக்கிறார். குறுகிய கால எல்லைக்குள் அச்சகம் திடகாத்திரம் பெற்று நல்ல நிலையில் இருக்கும் என்பதற்கு ஐயமில்லை.

சபையின் வளர்ச்சியிலேயே அச்சகத்தின் வளர்சியும் தங்கியிருக்கிறது. சபையின் வளர்ச்சிக்கு தற்போதைய காரியதரிசி திரு த. சண்முகலிங்கம் J.P, தனாதிகாரி வைத்திய கலாநிதி வே. யோகநாதன், பரீட்சைக் காரியதரிசி சைவப் புலவர் வ. கந்தசாமி, உப அதிபர் மகாவித்தியாலம் திரு. நம. சிவப்பிரகாசம் சட்டதரணி, சட்டத்தரணிகள் திரு த. செல்வராசா, திரு.ச. லோகேஸ்வரன் J.P, திரு. இ. இ. தங்கராசா - L.L.B, திரு. க. சிற்றம்பலம் அதிபர், திரு. அ. சேனாதிராசா B.A, திரு. க. முருகரத்தினம் J.P திரு. செ. சண்முகம்பிள்ளை இளைப்பாறிய பிரதம கணக்கியல் அதிகாரி திரு. மு. சிவராசா இளைப்பாறிய பிரதம கணக்கியல் அதிகாரி, திரு. ஆ. செல்லையா இளைப்பாறிய அதிபர், திரு. சே. சிவராசா B.Sc ஆசிரியர் போன்ற பெருமக்கள் கண்ணும் கருத்துமாக இருந்து கடமை புரிகிறார்கள். அவர்களின் முயற்சியும் ஒத்துழைப்புமே சபையின் சிறப்பு. சபையின் சேவையில் முழு மூச்சோடு ஈடுபட்டு வயோதிபர்களான, சித்தாந்த சிரோமணி மு. மயில்வாகனம் முகாந்திரம் E. P. இராசையா J.P அவர்கள் சரித்திர புருஷர்களாக விளங்குவார்கள்.

இந்து சாதனப் பத்திரிகையைச் சபை தனது சொந்தமான இயந்திரசாலையில் அச்சிட்டு வெளியாக்குவதை முக்கிய சைவத் தொண்டாகக் கருதுகிறது. தற்பொழுது இந்தத் தொண்டின் கதாநாயகனாக விளங்குபவர் எங்கள் மதிப்புக்கும் அன்புக்கும் உரிய பிரபல சட்டத்தரணியும், எழுத்தாளரும், பேச்சாளரும், கவிஞருமாகிய திரு. நம. சிவப்பிரகாசம் அவர்களே. சென்ற முப்பத்தைந்து ஆண்டுகள் அளவில் இத்தொண்டில் முழுமனத்துடன் ஈடுபட்டு மாறில்லா மகிழ்ச்சியிலே திளைத்திருக்கின்றார்.

வேதனத்தை மறுத்து, போக்குவரவுச் செலவுமில்லாமல், சேவை உணர்ச்சியோடு, ஒருவித புகழையும் நாடாமற் கடமைபுரிவதுதான் இத்தொண்டின் சிறப்பு அம்சம் இப்பத்திரிகை அறுகு போல் வேரூன்றி, ஆல் போலப் படர்ந்து, அரசு போலந் தாளிர்த்து மூங்கில் போல் முறியாது உலகம் இருக்கும் வரை வளர்ந்து, சைவ உலகுக்கு ஒரு எழுத்துக்காரட்டாக விளங்க வேண்டும் என்பதே எமது பிரார்த்தனையும் சபையின் வேணவாவும்.

பத்திரிகைக்கு இதற்குமுன் ஆசிரியர்களாக இருந்த சைவப் பெரியார்களை நாங்கள் மறக்க முடியாது. திருவனந்தபுரம் உயர்நீதிபதியாய் இருந்து இளைப்பாறிய திரு. தா. செல்லப்பாபிள்ளை அவர்கள் முதற் பத்திராதிபராய் இருந்து பத்திரிகைக்கு மெருகூட்டினார். பின்பு திருவாளர்கள் ச. கதிரவேலு அ. சபாபதி, மு. சபாரத்தின சிங்கம், எஸ். இளையதம்பி. வ. நாகலிங்கம், த. கயிலாசபிள்ளை, பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தன் ஏ. வி. குலசிங்கம், த. முத்துச்சாமிப் பிள்ளை, மு. மயில்வாகனம் போன்றவர்கள் ஆசிரிய பீடத்தில் இருந்து சிறப்பித்தார்கள். இன்று நூற்றாண்டு விழாக் கோலத்தைக் காண்பதற்கு தற்போதைய ஆசிரியரைத் தவிர திரு. மு. மயில்வாகனம் ஒருவரே எஞ்சி இருக்கின்றார்.

இப்பத்திரிகையைப் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் சமய பாடத்துக்கு உதவக்கூடியதாக விடயங்களைப் புகுத்திப் பிரசுரிக்க இருக்கின்றேம். அதைவிட சைவ மக்கள் அறிந்திருக்க வேண்டிய கருத்துக்கள் பல இருக்கின்றன. அவற்றையும் தெரிந்தெடுத்துப் பொது அறிவுக்காகப் பிரசுரிக்க இருக்கின்றேம். அவ்வகையில் கல்லூரி மாணவர்களும் பொதுமக்களும் பத்திரிகையை ஆவலுடன் படிக்கச் சந்தர்ப்பம் ஏற்படும்.

சைவ பரிபாலன சபைக்குச் சேவையாற்றிய பல பெரியார்கள் இன்றும் இருக்கிறார்கள். அரும் பெரும் சேவையாற்றி இறைவனடி சேர்ந்தவர்கள்தான் எண்ணிக்கையில் கூட; ஸேர். பொன்னம்பலம் இராமநாதன். ஸேர். அம்பலவாணர் கனகசபை, ஸேர். வைத்திலிங்கம் துரைச்சாமி இன்னும் பல பெரியார்கள் சபைக்குத் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள். காரியதரிசியாகவும், தனாதிகாரிகளாகவும் இருந்து கடமையாற்றியவர்களும் வேறு பலர். இன்னும் சிலர் நிர்வாகத்தில் இருந்து சிறந்த ஆலோசனை வழங்கியிருக்கிறார்கள். தருணம் எழும் நேரத்தில் இவர்களின் சேவையையும் இன்னுமொரு கட்டுரையில் விபரிக்கலாம்.

வாழ்க சபை!
வாழ்க சைவ நீதி!
மானிகள்!
ஊழியர்கள்!

வாழ்க இந்துசாதனம்.
வாழ்க இந்துசாதன அபி
வாழ்க சைவப் பிரகாச அச்சக
சுபம்

## பத்திரிகா தர்மம் பண்பாடு ஓங்கிட ஏடு

"முத்தமிழ் வாரிதி"
பிரமஸ்ரீ ந வீரமணி ஐயர் அவர்கள்

வெண்பா

இந்துமத தர்மம் இகத்தி லிலங்கிவர
செந்தமிழில் ஏடு செகங்கொழிக்க — பைந்தமிழிற்
பத்திரி காதர்மம் பண்பாடும் ஓங்கிடவே
சித்தமெழுத் தாண்டான் சிவம்.

## அதிபர் சபாலிங்கம் அவர்களின் நினைவு

பல கல்லூரிகளிலே அதிபராகப் புகழ் பெற்ற வரும் சைவப் பிரகாச அச்சகக் கௌரவ அதிபராகக் கடமை புரிந்துதவி செய்தவருமான அமரர் இ. சபாலிங்கம் அவர்களின் மறைவு நினைவாக அறிஞர்களின் அரிய உரைகளுடன் ஒரு மலர் வெளியிடப்பட்டிருக்கின்றது.

★ அன்ன நடையில் ஆண்டுகள் நூற்றுக் கண்மிக்கும் பேறு ★

# சைவசமயம் தளர்வுருது வளர்க்கும் தனித்துவம்

சைவ அருட் பெருந்தகையீர்;

பெருமை பெறு ''இந்துசாதனம்'' நூறு ஆண்டைப் பருவமடைந்து வியப்புறு சாதனை ஒன்றைச் சாதித்துளது. தோன்றி இடையில் மறைந்துபோன பல புதினப் பத்திரிகைகளையும், சஞ்சிகைகளையும் கண்டுள்ளோம். சைவசமயம் தளர்வுருது வளர்வதற்குத் தனித்துவ இடம் வகிக்கும் ஒரேஒரு பத்திரிகை இதுவெனில் அது மிகையாகாது. ஒரேஒரு பத்திரிகையில் தமிழ், ஆங்கில இருமொழிக் கட்டுரைகள் ஆதியன வெளிவரும். ஒரேஒரு பத்திரிகையும் இதுவே. தகைசான்ற சைவசமயப் பற்றும் தமிழ் மொழிப்பற்றுமுடைய தமிழ் மக்கள் இதற்கு ஆதரவு நல்காதிருக்க முடியாது. நாம் அழுத்தமாக வேண்டிக்கொள்வதும் அஃதே. தமிழ் அறிவுக் களஞ்சியங்களான ஆசிரியர்கள் முன்னர் இதற்கு அரிய தொண்டு புரிந்து வந்ததும் அதில் பெரும் இடத்தை வகித்துவரும் திரு. நம. சிவப்பிரகாசம் J. P. U. M. அவர்களை மறக்கவே முடியாது. யாவரிடத்தும் பெரு மதிப்பை ஈட்டிய பெருமையும், முதுசைவப் பெரியாரும், கவிஞரும், முதிர்ந்த தமிழறிவும், ஆங்கில மொழிவன்மையும் உடைய பெருந்தகை அவர் சட்டத்தரணி ஒருவர் இத்துணை சிறப்பிடம் பெற்றிலங்குபவர் இவர் ஒருவரே எனலாம். அவர் நீடு வாழ வேண்டும்.

''இந்துசாதனம்'' சிரஞ்சீவியாக மேன் மேலும் சிறப்புற புதுமைப் பொலிவோடு வளர்ந்து மக்களுக்குத் தளர்வுருது சேவை செய்ய வேண்டுமென இறையருளைப் பிரார்த்தித்து எமது உளமார்ந்த நல்லாசிகளை வழங்குகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய ஸ்வாமிகள்

## இந்துமகளே! இனிது வாழி!!

[ ஆக்கியோன்: பண்டிதர் - செஞ்சொற் புலவன்
மா. குமாரசாமி, ஒய்வுபெற்ற பாடசாலை அதிபர் )

ஆசிரியப்பா

மெய்த்தரு சான்றோர் மேவிய மதியில்
உய்வகை காணும் உயரிய நோக்கில்
தெய்வச் சபையாய் சிவனருள் சிறக்கச்
சைவபரிபாலன சபையைத் தோற்றித்
தந்திடு மகள்தான் தாரணி தன்னில்
இந்துபோற் றண்ணொளி யெங்கும் பரப்பி
இந்துமா மக்கள் இதயம் மிளிர,
ஆதிநா யகனின் அருங்குண நலன்கள்
வேத சிவாகம விதிமுறை யுண்மைகள்
மேதகத் தந்து மேருபோ லுயர்ந்து
சாதனை செய்துளம் தங்கிடும் இந்து
சாதனப் பெயர்கொள் தனிமகள் வாழி
வித்துவ சிரோமணி வித்தகர் வித்தாய்
முத்தாய் முளைத்த முதல்வியே வாழி
நாவலர் பெருமகர் நல்லூர்ப் பெரியர்
காவலர் புலவர் கைலா சபிள்ளை
வாரிச் சேர்த்திட வளர்ந்தாய் வாழி
மட்டுவில் தந்த மன்வேற் பிள்ளையின்
மைந்தர் பண்டிதர் மாமணி சீர்சம்
பந்த பிள்ளையைத் தனித்துணை யாக்கிய
இந்து மகளே! இனிது வாழி
மல்லா கப்பதி மணிமா வித்துவான்
நமசி வாயரின் நன்மகன் புலவன்
சைவ மாசபைச் சால்பார் தலைவன்
சட்டத் தரணி தக்கோன் இனியன்
சுந்தரன் சிவப்பிர காசன் துணைதர
ஆண்டுகள் நாற்பது அறவுரை தந்தாய்
தூண்டும் சுடராய் துலங்குவை வாழி
நீண்டிடு நூறு நிறைந்திட வாழி
மக்கள் மனமாம் மாங்கனி யுண்டு
திக்கெலா முலவிச் சிறந்தாய் வாழி
நெல்லிக் கனியால் நீண்டநாள் வாழ்ந்த
ஔவைப் பாட்டிபோல் அருந்தமிழ் செய்து
இறவாப் புகழுடன் ஈண்டுபல் லாண்டு
வாழி வாழி வாழிய இனிதே.

விருத்தம்

நாவலரின் நன்மருகன் நாமகளின் நாவுடையான் நல்லமகள்
காவலனும் கைலாய பிள்ளையின் கைமடியிற் கண்வளர்ந்து
தேவரெனுந் திருஞான சம்பந்தர் சேர்இந்து சாதனத்தாள்
பூவுலகிற் பவனிவரப் பூண்டசிவப் பிரகாச புண்ணியனே.



## எழுச்சி உரை

யாழ்ப்பாணத்துப் பல்கலைக் கழகத்துத் தமிழ்த்துறைத் தலைவர், பேராசிரியர்
**கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை**

தொண்ணூற்றொன்பது ஆண்டுகள் பூர்த்தி செய்து நூறுவது ஆண்டிலே கால் வைக்கும் இந்துசாதனத்தை "வாழ்க இன்னொரு நூறுண்டு" என்று வாழ்த்துவதிலே பூரிப்படைகிறேன்.

ஆறுமுகநாவலர் என்ற தனி மனிதர் ஓர் இயக்கமாக மாறி, சைவ சமயப் பாதுகாவலராக விளங்கிய நிலை காலமாகிவிட்டிருந்தது.

### நூறுண்டு காணும் சைவ இதழ்

சைவசமயத்தைப் பாதுகாக்க யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை தோன்றிற்று. அதனுடைய பணிகளுள் ஓர் அங்கமே தமிழிலும் ஆங்கிலத்திலுமாக வெளிவரத் தொடங்கிய இருமொழிப் பத்திரிகையான 'இந்துசாதனம்' ஆகும்.

சைவ பரிபாலன சபைத் தலைவராக, நாவலர் மருகர் வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை விளங்கிய காலத்திலே இந்துசாதனத்தின் முதல் தமிழ் ஆசிரியராக நாவலருடைய தமையனார் மகன் தம்பு கைலாயபிள்ளையும் முதல் ஆங்கில ஆசிரியராக திருவிதாங்கூர் உயர்நீதிமன்று அரசர் தா. செல்லப்பாபிள்ளையும் தொடக்கி வைத்த இதழ் இன்று நூறுண்டு காண்கிறது.

### ஆய்வுமூலம் அறிந்தவை

அன்றைய திருவிதாங்கூரினதும் இன்றைய கேரளத்தினதும் தலைநகராக விளங்கும் திருவனந்தபுரத்துத் தமிழர்களிடையே சைவ பரிபாலன சபை ஒன்று இன்றும் செயற்பட்டு வருகிறது தென்னிந்தியாவிலே, சைவ பரிபாலன சபை இது ஒன்று மட்டுமே காணப்படுவதால். இது யாழ்ப்பாணத்துச் சைவபரிபாலன சபையைப் பின்பற்றி, யாழ்ப்பாணத்தவரான செல்லப்பாபிள்ளையின் செல்வாக்கிலே தொடங்கப்பட்டதாகலாம். 1973-74-ஆம் ஆண்டிலே, திராவிடமொழியியற் கழகத்தின் புலமைப் பரிசில் பெற்று நாம் திருவனந்தபுரத்திலே ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த காலத்திலே திருவனந்தபுரம் சைவ பரிபாலன சபை எம்மை ஒரு நிகழ்ச்சிக்கு அழைத்து அதிலே பங்கு பற்றச் செய்து கௌரவித்தது.

கடந்த நாற்பதாண்டுகளாக இந்துசாதனத்திலே பணியாற்றிவரும் நம. சிவப்பிரகாசம் அவர்கள் இந்துசாதனத்தின் நூறுவது ஆண்டு மலரையும் ஆசிரியராக இருந்து வெளியிடவிருக்கிறார்.

### 'வாழ்க இன்னொரு நூற்றுண்டு'

இந்துசாதனம் இன்றும் காலத்தின் தேவையாகவே இருக்கிறது; அது இன்று வரை செய்துவரும் பணிகளை இனியும் தொடர்ந்து செய்து வரவேண்டும் பத்திரிகையை வளர்த்தெடுப்பதற்கு, இந்துசமூகம் முன்வரவேண்டும்.



அச்சக அதிபர்-
திரு. இ. செ. மன்மத ராஜன்.

## வாழ்த்துரை

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கமாக சைவபரிபாலன சபையாரால் வெளியிடப்பட்டுவரும் இந்து சாதனம் இன்று நூறுவது வயதினை ஆரம்பித்துள்ளது என்பதனை நினைக்கும்போது சைவத் தமிழ் உலகம் மகிழ்ச்சியடையாமல் இருக்கமுடியாது. சைவ சமய மக்களின் சமயப் பத்திரிகையாகிய இந்துசாதனம் இதுவரையும் ஆற்றிய பணிகள் மதிப்பிடற்குரியது. மேலும் எதிர்காலத்திலும் அதன் சேவையைச் சைவத் தமிழ் உலகம் எதிர்பார்த்து நிற்கின்றது. இந்துசாதனப் பத்திரிகையின் எழில்மிகுவளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பவர் அதன் கௌரவ ஆசிரியர் திரு. நம. சிவப்பிரகாசம் அவர்களே என்றால் அது மிகையாகாது. வயது தளர்ந்தாலும் உள்ளத்தாலும், அறிவாலும் தளராது ஆற்றும் பணியைச் சைவத் தமிழ் உலகம் என்றுமே மறக்கமுடியாது. மேலும் இந்துசாதன கௌரவ ஆசிரியர் திரு: நம. சிவப்பிரகாசம் அவர்கள் பல்லாண்டு பணியாற்றுவதற்கும், இந்துசாதனம் வீறுநடை போட்டு வளர்ச்சி அடைவதற்கும் எல்லாம் வல்ல சிவபெருமான் திருவருள் செய்யவேண்டும் என்று வாழ்த்தி வணங்குகின்றோம்.

சைவப்புலவர்
வ. கந்தசாமி,
உப அதிபர்,
யா/ பெரியபுலம் ம: வி

## ஆங்கில இதழின் அபிமான அறிஞர்கள்

ஈழநாட்டின் வரலாற்றையும் யாழ்குடாநாட்டின் வம்சவழிகளையும் ஆராய்ந்து தொடர் கட்டுரைகள் எங்கள் ஆங்கில இதழில் எழுதியவர் தெல்லிப்பளைச் சட்டத்தரணி திரு: வே. குமாரசுவாமி கலைமாணியவர்கள் - பாராளுமன்ற உறுப்பினராயிருந்த திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள் தந்தையார்.

சோதிடம் வானசாத்திரம் சமயம் பற்றி அரிய கட்டுரைகள் உதவிய அறிஞர் வைத்திய கலாநிதி சு. இரமாநாதன் அவர்கள்.

கொழும்பு பல்கலைக் கழகக் கல்லூரியிலே தமிழ் விரிவுரையாளராகவும் அச்சபை அலுவலக அதிகாரியாகவும் திகழ்ந்த திரு. ச. பெரியதம்பி கலைமாணி அவர்கள் ஆங்கில இதழில் அரிய கட்டுரைகள் உதவி ஆதரவு தந்ததமை குறிப்பிடத்தக்கது.

கல்வித் திணைக்கள வித்தியாதிகாரியாக விளங்கிய திரு. குணசேகரம் அவர்கள் மிக நுட்பமான கட்டுரைகள் தமிழ் இன வரலாற்றைப்பற்றி எழுதி வந்தனர். இவர் ஒரு கிறிஸ்தவ மதத்தினர் என்பது கவனிக்கப்பட வேண்டியது.

மானுட வாழ்வினில் ஆநந்தம் வேண்டுமோ நூறெழு நாளிந்து சாதனம் பேறுண்டோ

# ஒருநூற்றுண்டுகாணும் இந்துசாதனம்

## ஆங்கிலம் - தமிழ்

முதுகலைமாணி இரா. கனகரத்தினம்
பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர்.

பத்தொன்பதாம் நூற்றுண்டிலே இலங்கையிலே ஏற்பட்ட சமூக சிந்தனை வளர்ச்சிக்குப் பொதுசனத் தொடர்புச் சாதனங்கள் மிக முக்கிய பங்கினை வகிக்கின்றன. அவற்றுள் பத்திரிகையின் பங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதற்கு அச்சுயந்திர வசதியும், அதனைத் தனியார் பயன்படுத்தும் உரிமையை அரசு வழங்கியமையும் முக்கிய காரணங்களாகக் கூறலாம். ஆரம்பத்தில் இங்கு இதனை வளர்த்துச் செல்வதில் முக்கிய தொண்டினை ஆற்றியவர்கள் கிறிஸ்து சமயப் பாதிரிமார்களேயாவர். அவர்கள் இச் சாதனங்களைப் பெரிதும் சமய நடவடிக்கைகளுக்கே பயன்படுத்தினர். இத்தகைய அவர்களது நடவடிக்கைகள் சுதேசிய சமய வாதிகளைத் தத்தம் சமய விருத்தியின் பொருட்டும் சுய மத நிலைபேற்றின் பொருட்டும் புதிய பத்திரிகைகளை ஆரம்பிக்கத் தூண்டின. இம் மதப் போராட்டத்தின் மத்தியில் எழுந்த பத்திரிகைகள்; மக்களிடத்திலே தேசிய, சமய அறிவியல், சிந்தனைகளை வளர்த்துச் சென்றமையினால், காலப் போக்கில் நாட்டில் தினசரிப் பத்திரிகைகளும் தேசிய ரீதியில் அமைந்த பத்திரிகைகளும் வளர வாய்ப்பளித்தன.

19 ஆம் நூற்றுண்டில் கிறிஸ்தவர் மத்தியில் இருந்து 'உதயதாரகை' (1841) 'கத்தோலிக்கப் பாதுகாவலன்' (1876) மாணவன் (1896) 'சன்மார்க்கபோதினி' முதலான பத்திரிகைகள் வெளிவந்தன. 'முஸ்லீம் நேசன்' (1882) சர்வ ஜன நேசன் (188[illegible]) சைபுல் இஸ்லாம் (1890) இஸ்லாமிய மித்திரன் (1893) முதலான பத்திரிகைகள் முஸ்லீம் மக்கள் மத்தியினின்று தோன்றின. சைவர்கள் மத்தியிலிருந்து இலங்கைநேசன் (1877) சைவ உதயபாநு (1880) 'சைவ சமய போதினி' (189[illegible]) 'விஞ்ஞான வர்த்தினி' (1882) 'இந்துசாதனம்' (1889 முதலான பத்திரிகைகள் வெளிவந்தன. நாட்டின் தேசிய நோக்கில் 'இலங்காபிமானி' (1863) 'இலங்கைக் காவலன்' (1864) 'இலங்கைக் பாதுகாவலன்' (1864) முதலான பத்திரிகைகள் வெளிவந்தன.

மேற்கூறிய பத்திரிகைகளில் உதயதாரகைப் பத்திரிகை தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் மறுமலர்ச்சிப் பத்திரிகையென்றே கூறுதல் வேண்டும். ஆரம்பத்தில் அது சமயப் பொதுமையுடன் தன்னை வளர்த்துச் சென்றமையினால் ஆறுமுகநாவலர், காசிவாசி செந்திநாதையர் முதலான சைவப் பெரியார்கள் அதற்கு விடயதானம் செய்து வந்தனர் காலப்போக்கில் இப்பத்திரிகை சைவசமய கண்டனங்களை வாரி இறைக்க முற்பட்டு நின்றது. இந்தநிலைப்பாடு சைவர்களின் மத்தியில் தம் சமய, சமய சிந்தனைகளைச் கட்டிக்காக்கத் தமக்கோர் பத்திரிகை அவசியம் என்பதை சிந்தித்துச் செயல்பட வழிவகுத்தது.

இப் பின்னணியிலே, சின்னதம்பி என்பார் 'இலங்கை நேசன்' என்னும் பத்திரிகையை 1877 ஆம் ஆண்டு ஆரம்பித்தார். இப் பத்திரிகை நாவலரவர்களின் சமய நடவடிக்கைகளுக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து வந்தது ஒரு வகையில் இது நாவலரவர்கள் நடத்தும் பத்திரிகையாகவே செயற்பட்டு வந்தது இதன் பின் 1880 ஆம் ஆண்டு "சைவ உதய பானு" என்னும் பத்திரிகை வெளிவந்தது; இது நாவலரவர்களின் மாணவ குழாத்தினுல் நடத்தப் பெற்ற பொழுதும் நீண்ட காலம் நிலைத்து நிற்க முடியவில்லை .1982 இல் தோன்றிய விஞ்ஞான வர்த்தினியாலும் நீண்ட காலத்துச் சேவையாற்ற முடியவில்லை சைவர்கள் மத்தியிலே தோன்றிய பத்திரிகைகள் முலாகாலஞ் செயலிழந்து போவதைக் கண்ட சைவ மக்கள், தாபனரீதியாக பத்திரிகையைத் தோற்றுவிக்க விரும்பினர். யாழ்ப்பாணத்துச் சைவப் பொது மக்களும் நாவலரவர்களின் மாணவர் பரம்பரையினரும் இணைந்து சர்வதாரி ஹு சித்திரை மீ கசு (29 4-1888) யாழ்ப்பாணம் சைவசமய பரிபாலனசபை (சைவபரிபாலனசபையை) என்னுமோர்சபையை ஆரம்பித்தனர். அதன் இலட்சியங்களுளொன்றுக "சைவமக்களுக்குச் சிறப்பாகவும் தமிழ்மக்களுக்குப் பொதுவாகவும் பயன் தரக்கூடிய பத்திரிகைகளைத் "தமிழிலும், ஆங்கிலத்திலும் தொடர்சியாக நடத்தல்" என்னும் விடயம் அமைந்திருந்தது 1889 ஆம் ஆண்டு சபையார் தம் இலட்சியத்துக்கு வடிவம் கொடுத்தனர்.

விரோதி ஹு ஆவணி மீ கசு௭ (11-9-1889) புதன் கிழமை சுபதினத்தில் இந்து சாதனம் என்றும் ஆங்கிலத்தில் 'Hindn Organ' என்றும் நாமமிட்டுப் புறத்தே ஆங்கிலத்திலும், அகத்தே தமிழுங் கொண்ட ஒரு பத்திரிகையைத் தொடங்கிப் பட்சத்துக் கொருமுறை டெமி என்னும் கடிதப்பிரமாணத்தில்வெளியிட்டுவந்தனர். இப்பத்திரிகைகளின் முதல்ஆசிரியர்களாக நாவலரவர்களின் பெருமகன் கம்பு கைலாசப்பிள்ளை அவர்களும், ஒய்வு பெற்ற திருவிதாங்கூர் உயர் நீதிமன்ற நீதிபதி தா. செல்லப்பாபிள்ளை அவர்களும் இருந்து வந்தனர். இப் பத்திரிகைகள் காலப்போக்கில் ஆல்போல் தளைத்து அறுகுபோல் வேரூன்றி வளர்வதாயின் 1889 ஆம் ஆண்டு ஆடிமாதம் முதல் இப் பதத்திரிகைகள் தனித்தனிப் பிரசுரங்களாக வெளிவந்தன 1906 ஆம் ஆண்டு ஆடி மாதம் முதல் இவற்றின் பிரமாண கனவுகள் விரிவடைந்து ரேயல் பிரமாணத்தில் வெளிவந்தன. 1913 ஆம் ஆண்டு ஆடி மாதம் முதல் இந்து சாதனப் பத்திரிகை வாரந்தோறும வியாழக் கிழமையிலும் Hindu Organ வாரந்தில் இருமுறை, திங்கள், வியாழக்கிழமைகளில் வெளிவரலாயின. 19.3 ஆம் ஆண்டு ஆடி மாதம் 5-ந் தேதி முதல் இந்து சாதனப் பத்திரிகையும் வாரந்தோறும் இருமுறை, திங்கள், வியாழக்கிழமைகளில் வெளிவர ஆரம்பித்தது.

இவ்விரு பத்திரிகைகளும் "சைவசமய வளர்ச்சியையே" அதன் தொனிப்பொருளாகக் கொண்டிருந்த பொழுது, தமிழ் மக்களின் சமூக, அரசியல், பொருளாதார, மொழிச் சிந்தனைகளை வளர்த்துச் செல்வதிலும் மிகுந்த கவனஞ் செலுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கையின் அரசியற் கட்சி அடிப்படையிலே வளர்ச்சி பெறுவதற்கு முன்பாகத் தமிழ் மக்களின் பெரும்பான்மையோரின் சமூக, அரசியற், பொருளாதார சிந்தனைகளின் வெளிப்பாட்டின் ஏகப் பிரதிநிதியாக விளங்கிய பத்திரிகைகள் இந்து சாதன , Hindu Organஎன்று கூறில் மிகையன்று, உதயதாரகை, கத்தோலிக்கப் பாதுகாவலன் ஆகிய இரு பத்திரிகைகளும் இக் காலப்பகுதியிலும் தொடர்ந்தும் சேவையாற்றிய பொழுதும் அவையோர் குழுநிலைப் பத்திரிகையாகவே மக்களாற் கவனத்திற் கொள்ளப்பட்டது.

இந்து சாதனம், Hindu Organ ஆகிய இரு பத்திரிகை உலகப் போர்களினுல் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடிகளுக்கும் உள்நாட்டில் ஏற்பட்ட அரசியல், சட்ட நெருக்கடிகளுக்கும் ஈடுகொடுத்து; இன்று வரையும் அதன் இலட்சியங்கள் குலையாமையும் அதன் அடிச்சுவடுகள் சிதைந்து அற்றுப் போகாமையும் சைவ பரிபாலன சபையும், அதன் ஆசிரியர்களும், அதிபர்களும், ஊழியர்களும் காப்பாற்றி வந்துள்ளனர். கடந்த கால் நூற்றுண்டுகளுக்கு மேலாக இவ்விரு பத்திரிகைகளின் ஆசிரியாராகக் கடமையாற்றி வருபவர் சிறந்த புலவரும் சட்டத்தரணியுமான நம. சிவப்பிரகாசம் அவர்கள் ஆவார். இப் பத்திரிகைகளின் தொடர்ச்சியான வளர்ச்சிக்கு அவரது அயராஉழைப்பும் ஊக்கமுமே பெரிதும் காரணமெனலாம். இவரது காலகட்டத்தில் இவ்விரு பத்திரிகைகளும் நூற்றுண்டு காண இருப்பது பெருமைக்குரியது பாராட்டப்பட வேண்டிய தொன்றுகும்.

1877 ஆம் ஆண்டு முதல் இனிறு வரை சமய சார்பாகவும் தேசிய ரீதியாகவும் எத்தனையோ பத்திரிகைகள் வெளிவந்துள்ளன. அவை யொவ்வொன்றும் நூற்றுண்டு கண்டவையல்ல. அவற்றுள் பெரும்பாலானவை பல்வேறு காரணங்களினுல் செயலிழந்து விட்டன. இந்நிலையில் ஒரு நூற்றுண்டினைக் காண

(வளர்ச்சி 8 ஆம் பக்கம்)

---

### அற்புதப் பிள்ளையார் மல்லைப் பொற்பதியில் உத்ஸவக் காட்சி

**தேர்உலாவிலேசித்தித்திருமகனூர்**

பழம்பதி மல்லாகம் வரலாற்று வளம் பொதிந்த பெருந் தலம். ஆங்கு அற்புதப் பிள்ளையாரும் இடப்பாகம் வேலைக் கை ஏந்தும் பிள்ளையாரும் பெருங் கோயில்கள் கொண்டெழுந்தருளியிருக்குங் கோலம் மிக வனப்பானது.

ஆலய முன்றிலிலே இரு பெரும் முதிய அரசமரங்கள் தண்ணிழல் கொடுத்த வண்ணம் ஆகாயத்துப் பரந்தெழுந்து மண்ணில் உள்ளன.

மத வழிமடம் தெற்குத் திசையில் விளங்குகின்றது அருகிலே வேபபும், அரசும், கணபதியும், கந்தனும் இணைபிரியா தெழுந் தருள் வகையில் ஒன்றேடென்று அணைந்த வண்ணம் அழகும், இயற்கையும், அமைதியும் அளிக்கின்றன.

அந்தணர் இருக்கை மேற்குத்திக்கிலே செந்தண்மைச் சிறப்புடன் ஓங்குகின்றது. ஈசான மூலையிலே மகா வித்தியாலயம் மருவியபடி புகழிற் பெருகுகின்றது.

கொடி ஏற்ற விழா இங்கு கோலாகலமாக நிகழ்ந்து வேட்டை விழாவும் சப்பறத் திருக்காட்சியும் நிறைந்தபின் வெள்ளிக் கிழமை தேர் உலா என்றுமுள்ள சீருடன் பெருங் கூட்டமாக அடியார்கள் புடைசூழ மங்கல வாத்திய சங்கீதத்துடனும் பேரிகை சங்கநாதமுழக்குடனும் வேதவொலி திருமுறைப் பாராயணம் யாவும் திகழ நன்கு நடந்து சாந்தி அபிடேகமும் செய்யப்பெற்று பத்தர்கள் பழையவரின் அருட்பிரசாதம் பெற்றனர்.

தீர்த்த நிகழ்ச்சியும் கொடியிறக்கமும் கீர்த்தியாக மறுநாள் சனிக்கிழமை நடைபெற்றன.

இத்தலத்திலே 197 , 1975, 197 ஆம் ஆண்டுகளில் கணபதியாருககுகந்த கஜமுக வாகனமாகப் பெரியதோர் யானை தேரின் முன் பவனி வந்தது பேரநுறும் உண்டு.

தேர் உபயம் இந்துசாதன ஆசிரியர் அவர்களால் நிகழ்த்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

---

### தேரடியிலே திருமொழி ஓதுவோம்

**நாடுசீரடைய ஏதுவாகும்**

மாற்றமாம் வையகம் என்ற ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளின் அருள்வாக்குக் கிணங்க மாற்றங்களால் ஏற்படுவது இயல்பு. சாமாறே விரைகின்றோம். என்ற வாக்குக்கிணங்கப் பலரும் வாழ்கின்றுர்கள். அனைவரும் தமது தருமத்தையும் பண்பாட்டையும் காக்கக் கங்கணம் கட்டித்தவம் செய்ய வேண்டும். தற்போது சமூகம் தவத்தைப் பேணுது வெகு வேகமாக மனம் போனபோக்கில் விரைவாகச் செல்வது விரும்பத்தக்கதல்ல. வேகம் கெடுத்து ஆண்ட வேந்தனுகிய இறைவன் தரும் திருவருளைத் தவமூலம் பெற்று வருங்காலச்சந்ததியினருக்குவழங்க நாம் கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டும்.

கடந்த அரை நூற்றுண்டுக்கு மேல் யாழ்ப்பாணத்தில் ஞானஒளியாக விளங்கிய குருமூர்த்தியாகிய ஸ்ரீ சிவயோக சுவாமிகளது நற்சிந்தனையை அவர் திருவருள்பெற்ற நல்லூர் தேரடியில் ஓதுவது அனைவருக்கும் நன்மை தரும் தவமாகும். நல்லூரில் அடியார்கள் சேர்ந்து திருமுறை - கந்தர் அநுபூதி - கந்தபுராணம் - சிவபுராணம் கோளறு பதிகம் - நற்சிந்தனை, இவற்றை ஓதுவது தவம் செய்வோருக்கு ஊக்கம் தரும் சிவப்பணி என ஸ்ரீ சடையம்மா அறுபத்து மூவர் குருபூசை மன்றத் தலைவர் சிவபூசகர் திரு. சி. தம்பியையா நற்சிந்தனை-பஜனை சற்சங்க அடியார்களிடம் உரை நிகழ்த்தும் போது கூறினுர்.

**Hindu Organ**

SEPTEMBER (11-9-1988)

# The Occasion is Rare -Overjoyed, it we Adore

Let us greet this historic occasion, a rare moment, with sanctified salutation, and in all humility.

Counting from the memorabls moment of the historic inauguration of the Jaffna Saiva Paripal na Sabhai in the eventful year 1888, a period of hundred years -- a eentury -- has Just passed.

Today the HINDU ORGAN and the INTHUSATHANAM sponsored by this Sabhai, set their steady steps on the significant streteh of their hundredth year of publication.

Yes, it is a marathon march, a long and lovely way, where the ambition has been to continue the unending effort, wending in relays by personnel, with those retiring being substituted by fresh ones.

Shall we say it is perennial!

The high mark of special aptitude set by our first Editor, Shri T. Chellappahpillai, who earlier had adorned the Bench of the Supreme Court of the State of Travancore. was assiduously and ably maintained for a continous period of thirty five momentous years by the Honourable A. Sabapathy, the second Nominated Member representing the Tamils in the Ceylon Legis lative Council when the Great Leader, the indefatigable Sir Ponnampalam Ramanathan, the sole Elected Member was striding over there as a colossus. The void created by the passing away of this veteran Journalist. however, was adequately filled by a leading lawyer who was considered as the rising sun in the firmament of the fight for freedom- M. S. Eliathamby, whose rhetoric was greatly appreciated universally, particularly by the silver - tongued orator Sir Ramanathan and the Singing Bird of Bharat, Srimathy Sarojini Naidu, an equally reputed orator.

This attractive thread was taken up with rare eonfidence by subsequent editors — M. Sabaratnesinghe and V. Nagalingam Principals of Colleges and by M. S. Rajaratnam, A. V. Kulasingam and T. Muttusamypillai - all leading lawyers.

The present Editor, also a member of the legal profession. is an old boy of the Jaffna Hindu College founded by the Saiva Paripalana Sabahai.

We, ourselves, are on a marathon run, ready to enter our fortieth year in the editoriai office of these reputed journals.

Whatever worthy of mention that has been achieved has been due to the unstinted co-operation of the committee of management of the Sabhai and the administrating managers of the Saiva Prakasa Press, along with the willing and faithful performance of duties by the operators and compositors. Several distinguished scholars, Professors, Lecturers of Universities, gifted writers and commentators of the Noble Professions have been adorning our pages with their scholarly contributions.

Having arrived at a significant stop in this continuous journey, these Journals begin their hundredth year in all humbleness, but brimfull with confidence and courage; We are hopeful in maintaining the great achievement of the glorious past, inspired by the sacred hymns of the heavenly Thirumurais and Thoughts of our Spiritual Teachers.

To our readers we appeal for richer substenance, to the Saiva Public. we eommend ourselves and call for greater co-oPeration.

Reading "Periyapuranam"
Through
Inthusathanam & Hindu Organ
By M. S. Sithamparappillai
Tellippalai.

The reading public of "Inthusathanam" and "Hindu Organ" owe a debt of gratitude and sincere thanks to the erudite contributions under 'Irai Oli' and other pseudonyms by the learned Student Srimath Nama-Siva pragasam - our eminent Editor. Every noble line of the Inthusathanam is sacred in that one is reminded of our venerated Sekkilar of Periyapuranam (Thiruth thonder Puranam). What Saint Sekkilar had ventured to perpetuate the Citadel of Saivaism through his inimitable style of narration, the Editor wields his most facile pen to paint very graphically and faithfully the ancient philosophy and theology. Turning over the pages of Inthusathanam one is reminded of as if he is spacing through the Corridor of the Inner Prakaram of a sacred and Holy Temple. One reads through the lines with piety. Every line in the Inthusathanam is pregnant with deep religious thoughts and the reader is simply lifted to heavenly thoughts. The love and sincerity displayed in his writings endure the reader to it.

He who fails to read the Inthusathanam certianly misses what he cannot afford tomiss; he cannot be a true Saivist.

Long live-you Noble Editor!



முன்னாள் ஆசிரியர்
மு. மயில்வாகனம்



ஆசிரியர்-
திரு. நம. சிவப்பிரகாசம்
(இறை ஒளி)

## இந்து சாஸனமாக மிளிரட்டும்

ஈழம்வாழ் இந்துமக்களின் இதயக்குரலாக ஒலிக்கும் இந்து சாதனம் தமிழ்- ஆங்கில இதழின் நூற்றுண்டு விழா இதழுக்கு எழுதுவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு பத்திரிகையை, தமிழிலும் ஆங்கிலத்திலுமாக, நூற்றுண்டுகாலம் தொடர்ச்சியாக வெளியிடுவதென்பது இமாலய சாதனையாகும்.

1888 ஆம் ஆண்டில் உருவான சைவபரிபாலன சபையின் பிரசுரமாக தமிழில் இந்து சாதனமும், ஆங்கிலத்தில் HINDU ORGAN -ம் 1889 -ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி வெளியிடப் பெற்றன. வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை அவர்களின் அயரா முயற்சி இதற்குக் காரணமாக விருந்தது.

இந்துசாதனத்தின் முதலாவது ஆசிரியராகவிருந்து அரியநற்பணியை ஆரம்பித்து வைத்தவர் நாவலர் பெருமானின் தமையனார் மகனான கைலாயபிள்ளை அவர்கள். 1920 ஆம் ஆண்டு முதல் 1951 வரை அருமையான ஆசிரியப்பணிபுரிந்தவர் பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தர் அவர்கள்,

1948 ஆம் ஆண்டில் ஆங்கில இதழான HINDU ORGAN ன் உதவி ஆசிரியராகச் சேர்ந்து 1951 -ல் இந்துசாதனத்தின் ஆசிரியப்பதவியை சைவப்பெரியார் நம. சிவப்பிரகாசம் அவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

நூறு வயதாகும் இந்துசாதனப் பத்திரிகையுடன் நாற்பதாண்டுகால தொடர்புள்ள சிவப்பிரகாசம் ஐயா அவர்கள், கடந்த முப்பத்தாறு ஆண்டுகளாக ஆசிரியராகப் பணிபுரிவது மனதுக்கு மகிழ்வூட்டுவதாகவுள்ளது.

இந்துசாதனம் இவ்வுலகுள்ளவரை தொடர்ந்து வெளிவர வேண்டும்;

பெரியார் நம. சிவப்பிரகாசம் அவர்களின் அரிய ஆசிரியப் பணி பல்லாண்டுகள் தொடரவேண்டும்;

இந்துசாதனம் எமது மக்களின் இந்து சாஸனமாக மிளிர வேண்டும் என்று இறைவனை இறைஞ்சுகின்றேன்.

எஸ். திருச்செல்வம்
பிரதம ஆசிரியர்
முரசொலி / வாரமுரசொலி

### காசிவிநாயகர் மணவாளக் கோலம்தேசு

தெல்லிநகரில் 7-9-88 புதன் கிழமை காசிவிநாயகப் பெருமான் 18 ஆம் மணவாளக் கோல விழா ஆதீனகர்த்தா சிவ ஸ்ரீ சிவ. கணேசலிங்கக் குருக்கள் தலைமையில் நன்கு நடைபெற்றது.

அன்பர் அடியார்கள் பெருமளவில் நியமங்களை - சங்காபிசேகம் - பஞ்சமுக அர்ச்சனை கண்டு பேரானந்தமடைந்தனர்.

### அளவை நாகேஸ்வர ஆலய இரதபவனி

ஆவணி உரோகிணி நாள் அளவையூர் ஸ்ரீ நாகவரத நாராயணர் வீதியுலா விளங்கும் திருநாள். பிறவியின் பெருநோக்கம் இல்லறத்தில் இருந்தபடி துறவு நலத்தூய்மையுடன் இறைவனை இறைஞ்சித் திருநாமம் ஓதிய வண்ணம் ஈசன் புகழ்பாடுவதையேபணியாமெனக்கொண்டு திருத்தொண்டராகத் திகழும் அளவையூர் அருட்கவி சீ.விநாசித்தம்பி அவர்கள் இவ்வாலயத்தை ஒரு பெரு தபோ நிலையமாகப் பரிபாலித்து வருகின்றனர். உண்மை உணரும் பத்தர்கள் அங்கு தரிசனம் செய்து குருவருளும் திருவருளும் பெறுகின்றனர்.

வெண்பா

பாராய ணஞ்செய்து
பன்னூட் பழகிமெய்
ஆராயும் அன்பர்
அருட்கவி - நாராய
ணவென்று தேர்இவர
நன்கமைத்தார் நாமமது
நாவொன்ற வேநவில்வோம்
நாம்

இறைஒளி

### ஒரு நூற்றுண்டு

( 7ஆம் பக்கத்து வளர்ச்சி )

விழையும் இப்பத்திரிகைகளின் கடந்தகாலப் பணிகளை பல் வேறு கோணங்களிலும் இருந்து நோக்கி, மதிப்பீடு செய்வதுடன் அதன் வளர்ச்சிக்கு மேலு உத்துழைப்பும், ஊக்கமும் அளிப்பது தமிழ் மக்க



முன்னாள் அச்சக அதிபர்
முகாந்திரம் இ. பொ.
இராசையா

ளினதும் குறிப்பாக சைவமக்களின்து ஒவ்வொருவரது தலையாய கடனாகும் நூற்றுண்டு காணும் பத்திரிகைகளையும், அதன் ஆசிரியர்களையும் அதிபர்களையும் ஊழியர்களையும் நினைவு கூர்ந்து பல்லாண்டு வாழ்த்துவோம! போற்றுவோம்!! வாரீர்! வந்துசேருமின்!!

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதி 450 ஆம் இலக்கத்திலுள்ள சபையாரது சைவப் பிரகாச அச்சகத்தில் 1988 ஆம் ஆண்டு ஆவணி மாதம் (11 — 09 — 1988) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.
ஆசிரியர் நம. சிவப்பிரகாசம்
தொலைபேசி : 22356

மதாபிமானம் பெருக வருமே சதாவதானம்